www.tamilarangam.net

# தேசம்


சர்வதேச தமிழ் சஞ்சிகை

சிறுவர் தேசம் (03), தேசம் □ இதழ் 16 □ ஜனவரி 04 - மார்ச் 04 □ ISSN 1474 - 8770

## சமாதானத்தின் பெயரால்



## மிகப்பெரும் மனிதஉரிமை மீறல்: சிறப்பு முகாம்



**உலகில் சமத்துவம் மலர்ந்து அமைதியும் வளமும் பொங்கி வர உழைக்கும் மக்களின் நன்நாளும் தமிழர்களின் புத்தாண்டுமான பொங்கல் நன்நாளில் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் - புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொங்கல் வரலாறு:

# பொங்கல் தமிழர்களின் புத்தாண்டு

நாரதமுனிவர் ஒரு முறை கிருஷ்ண பகாவானைப் பார்த்து; அறுபதாயிரம் கோபிகைகளுடன் கூத்தடிக்கிறீரே ஒருத்தியையாவது எனக்குத் தரக்கூடாதா? எனக் கேட்டார். உடனே பகவான் கிருஷ்ணன்; என்னருகில் இல்லாமல் தனித்து இருக்கும் பெண்ணோடு நீர் குலாவலாம் எனப் பச்சைக்கொடி காட்டினார். உடனே அறுபதாயிரம் கோபிகைகளையும் தேடி ஓடினார் நாரதமுனிவர். அங்கு எந்தப் பெண்ணுமே தனித்த நிலையில் இல்லை. எல்லோரும் கிருஷ்ணனுடனேயே இருந்தனர். நாரதர் நிலைமையை கிருஷ்ணனிடம் முறையிட்டு, பகவானே நீயாவது எனக்கு சுகம் தரக்கூடாதா? என ஏங்கினார். அதற்கு கிருஷ்ண பகவான் நாரதரை யமுனையில் குளித்து விட்டு வரும்படி கட்டளையிட்டார். யமுனையில் குளித்த நாரதர் பெண்ணாக மாறினார்.

பெண்ணாக மாறிய நாரதரோடு கிருஷ்ண பகவான் கூடியிருந்த 60 ஆண்டு காலம் தான் பிரபவம் முதல் அட்சயம் வரையான ஆண்டுகள் என்கிறது புராணக் கதைகள். இக்கதை ஆரியர்களால் கொண்டுவரப்பட்டு திராவிடர்களான தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது. மிகுந்த ஆபாசம் நிறைந்த இந்தக் கதைவழிவந்த புத்தாண்டு தான் இன்று பெரும்பாலும் தமிழ்ப் புதுவருடம் என சித்திரை மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

தமிழ் ஆண்டு எனும் பெயரில் வழக்கில் இருக்கின்ற பிரபவ முதல் அட்சய வரை உள்ள பெயர்களில் தமிழ் இல்லை. மேலும் இந்த 60 ஆண்டுகள் பஞ்சக்கர முறையில் உள்ளது. அதனால் 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கணக்கீடுகளுக்கு இம்முறை உதவியாக இல்லை. மேலும் அதற்கு வழங்கப்பட்ட கதை அறிவிற்கும் அறிவியலுக்கும் பொருத்தமாக இல்லை.

தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் 1921ல் ஒன்று கூடி தமிழ் ஆண்டு பற்றி ஆராய்ந்தனர். அதன்படி திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது என்றும் முடிவெடுத்தனர். திருவள்ளுவர் காலம் கி மு 31 என்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது. திருவள்ளுவர் ஆண்டுக் கணிப்பில் முதல் மாதம் சுறவம் (தை), இறுதி மாதம் சிலை (மார்கழி). ஆகவே தமிழ் மக்களின் புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு. ஆங்கிலக் கணக்கீட்டின்படி இப்போது நாங்கள் 2004ம் ஆண்டில் நுழைந்து உள்ளோம். தமிழ் திருவள்ளுவர் ஆண்டுக் கணிப்பீட்டின்படி 2035 (2004+31). தமிழ்நாடு அரசு 1971 முதல் திருவள்ளுவர் ஆண்டை நடைமுறைப்படுத்தி வருகிறது.

## மலேசியத் தமிழர்கள் பொங்கலில் உலக சாதனை

மலேசியத் தமிழர்கள் 2004 பொங்கலில் உலக சாதனை ஒன்றைப் படைக்க உள்ளனர். வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த 1000 பேர் கலந்து கொள்ளும் மக்கள் பொங்கல் 2004 றொஆங் என்ற இடத்தில் பொங்கல் தினமான ஜனவரி 15ல் இடம்பெற உள்ளது. இந்த மக்கள் பொங்கலைக் காண உல்லாசப் பயணிகள் உட்பட 5,000ற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் இவ்விழாவிற்கு தனித்து வாழும் தாய்மார்களும் அநாதை அமைப்புகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு உள்ளனர்.

இப்பொங்கலை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்ய முயற்சி எடுப்பதாக ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பி கமலநாதன் தெரிவிக்கிறார். குடும்பங்கள் பெருமளவில் கலந்து கொள்ளும் விழாவாக இவ்விழா உலகசாதனை நிகழ்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மலேசியாவில் பல்வேறு இனமக்களும் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் வாழ்கிறார்கள் என்பதை உலகுக்குக் காட்ட இவ்விழா உதவும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர். முஸ்லீம் நாடு ஒன்றில் இடம்பெற்ற மிகப்பெரும் தமிழர் விழாவாக இது அமையவுள்ளது.

இன ஒற்றுமையையும் அமைதியையும் பேணும் இவ்விழாக்களை யுத்த பூமியான இலங்கைத் தீவிலும் கொண்டாடி மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவது அரசியல் தலைமைகளின் பேச்சுவார்த்தைகளிலும் பார்க்க பலன் மிக்கது என இலண்டனில் வாழும் மலேசியத் தமிழரான கஜேந்திரன் தெரிவிக்கிறார்.

இடமிருந்து
ஏற்பாட்டாளர்கள்
டத்தோ எம்
இரட்ணம்,
தயாளன் நாதன்,
டாக்டர் எம்
இராஜேந்திரன்

www.tamilarangam.net



உள்ளே :

தேசத்தின் பார்வை 01
முஸ்லீம்களது நம்பிக்கை வென்றெடுக்கப்படாமல் ஒரு தீர்வு அமையாது 02
கூலி அதிகம் இல்லை : கவிதை 03
பி ஏ காதரின் நூல் வெளியீடு : சர்வதேச இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள் : என்ன ? 04
சமாதானத்தின் பெயரால் ~ 06
சமாதானத்தின் பெயரால் ஆட்கடத்தலா ? ~ 09
மிகப் பெரும் மனித உரிமை மீறல் : சிறப்பு முகாம் ~ 10
வடக்கு கிழக்கு சுகாதாரத்திற்கு யார் பொறுப்பு ? ~ 13
இயேசு பிரான்களா : கவிதை ~ 15
ஆரோக்கியமான தமிழ் சமூகம் உருவாக ~ 16
மகாகவி ~ 19
முஸ்லீம்களது உரிமைகள் அங்கிகரிக்கப்பட வேண்டும் ~ 20
வீட்டிலே சும்மாதான் ~ 21
மானபங்கம் : கவிதை ~ 23
உங்களுக்கே இக்கேள்வி : கவிதை ~ 24

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
E11 3JX,
London, UK

# இந்தியப் பாடம்

இந்தியாவிற்கு மிக அருகில் இலங்கை இருக்கின்ற போதும் இந்தியாவின் ஒரு பகுதியாக இலங்கை என்றுமே இருந்ததில்லை. இந்தியா மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகள் பல படையெடுத்து ஆண்ட போதும்; அவர்களால் இலங்கையை தொடர்ந்து அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியவில்லை. ஏனெனில் இலங்கை மக்கள் போர்க்குணம் மிக்கவர்கள். அவர்களின் வீரம் செறிந்த போராட்டங்கள் வரலாறாக அமைந்துள்ளன. இருந்தும் தலைமைகளின் துரோகங்களே மக்கள் இன்னும் விடுதலை பெறாமைக்குக் காரணம். துரதிஸ்டவசமாக இந்நிலமை தொடர்கிறது.

இந்தியா தாய்நாடு என்றும் தந்தைநாடு என்றும் கூறிக்கொண்டு இந்தியா வரவேண்டும்; இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; என்ற குரல்கள் தற்போதும் எழுகின்றது. 1987ல் இந்தியாவின் வருகையும் ஏற்பட்ட அனர்த் தங்களின் வடுக்களும் காய முன்னரேயே இக்குரல்கள் எழும்புகின்றது.

இந்தியா உட்பட எந்த அந்நிய நாடும் ஈழத்தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறையுடன் உதவப் போவதில்லை. தமது சுயநலன்களுக்காகவே இந்நாடுகள் இலங்கையில் தலையிடுகின்றன. இதனை தமிழ் அரசியல் தலைமைகள் என்று கூறிக் கொள்பவர்கள் புரிந்துந்து கொள்ள வேண்டும்.

இந்திய மக்கள் குறிப்பாக தமிழ் நாட்டு மக்கள் வேறு அவர்களின் அரசாங்கம் வேறு. எம்மில் சிலரிடையே உள்ள இந்திய எதிர்ப்புணர்வு என்பது தமிழ்நாட்டு மக்களையும் கலைஞர்களையும் நோக்கியதாக திருப்பப்பட்டு உள்ளது. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எந்த வகையிலும் உதவாது என்பதுடன் மிகவும் முட்டாள்தனமானதும் கூட.

தமிழக மக்களின் இதயங்களை வென்றெடுத்து, அங்குள்ள விடுதலை அமைப்புகளுடன் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா எதிராகச் சென்றால் இந்திய மக்களே அழுத்தங்களைக் கொடுப்பார்கள். அவ்வாறான நிலை எண்பதுக்களில் காணப்பட்டது.

ஆனால் குறுகிய நோக்கமும் விவேகமும் அற்ற ஆயுதக் குழுக்கள் அந்நிலையைச் சீரழித்தனர். தமிழக மக்களை நம்பியதிலும் பார்க்க அவர்களின் அரசியல் தலைவர்களை நம்பினார்கள். தமிழகத்தை தங்கள் சுயநலன்களுக்காகப் பயன்படுத்தி அம்மண்ணில் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டு அம்மக்களில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டனர். இவர்கள் இந்திய அரசை வெவ்வேறு குறுகிய நோக்கங்களுக்காக நம்பினர். இன்று இந்திய அரசு மட்டுமல்ல இந்திய மக்களும் இலங்கை அரசின் பக்கம் சார்ந்து நிற்கின்ற நிலை ஏற்படடுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில் இந்தியத் தலையீட்டை கோருவது ஈழத் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் ஏற்படுத்தப் போவதில்லை. அன்று ஆயுதக்குழுக்கள் போராட்டத்தின் ஆரம்பகட்டத்தில் தமிழ்நாட்டை பின் தளமாகப் பயன்படுத்தி போராட்டத்தை சீரழித்தனர். அன்றும் இன்றும் அரசியல்வாதிகள் தமிழ்நாட்டைப் பின் தளமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் எப்போதுமே இந்தியப் பாடத்தைக் கற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முஸ்லீம்களது நம்பிக்கை வென்றெடுக்கப்படாமல்



# ஒரு தீர்வு அமையாது

கலாநிதி எம் வை எம் சித்திக்
Council of North & East Muslims of Sri Lanka - CONEMS

மூன்றாவது கட்டப் பேச்சு வார்த்தைகளில் தமிழ் பேசும் மக்களின் தாயகப் பிரதேசங்களிற்கு உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற வரையறைக்குள், ஐக்கிய இலங்கைக்குள்; தீர்வு காண அரசும் விடுதலைப் புலிகளும் உடன்பட்டனர். தமிழ் பேசும் மக்கள் என்பது தமிழர்களும் முஸ்லீம்களும். இம்முயற்சிகள் பெரும் வெற்றியென மக்கள் கருதினர். மேலும் விடுதலைப் புலிகள் தமது போக்கை மாற்றி ஏனைய சமூகங்களுக்கும் இடம்கொடுப்பார்கள் என மக்கள் நம்பினர்.

ஆனால் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட முழு அதிகாரம் உள்ள இடைக்கால சுயாட்சி அதிகார சபை (Interim Self - Governing Authority - ISGA) முஸ்லீம்களிடம் இருந்த நம்பிக்கையை கலைத்து விட்டது. இத்தீர்வுத் திட்டம் பிரதானமாக புலிகளதும் தமிழ் மக்களதும் நலன்களையே பாதுகாக்கின்றது; தீர்வுத் திட்டத்தின் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட வாசகங்களுடன் அவர்களின் இடைக்கால சுயாட்சி அதிகாரசபை முரண்பட்டு உள்ளது.

(திட்டத்தின் ஆரம்பத்தில் புலிகள் குறிப்பிட்ட வாசகங்கள்:"சட்டமும், மனித உரிமைகளும் எல்லோரது சமத்துவமும், மக்களுடைய சுயநிர்ணய உரிமையும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கமைய பாதுகாக்கப் பட்டு இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் நிரந்தர அமைதியைத் தரும் தீர்வை ஏற்படுத்துவோம்.")

இதனால் இத்திட்டம் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வை நோக்கிச் செல்லும் என்ற நம்பிக்கை இல்லை. மேலும் புலிகளுடைய இத்தீர்வுத் திட்டம் இலங்கை அரசியல் யாப்பிற்கு வெளியே அமைக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டு உள்ளது. அதனால் இலங்கை அரசு தனது இராணுவம், பொலிஸ், மற்றும் நீதித்துறை உட்பட்ட சிவில் அதிகாரங்களை வடக்கு கிழக்கில் இருந்து வாபஸ்பெற வேண்டும்.

கடந்த காலத்தில் முஸ்லீம் மக்கள் புலிகளால் வேதனைப்பட்டதை தீர்வுத் திட்டம் குறிப்பிடவில்லை. உண்மை இப்படி இருக்கையில் வட கிழக்கில் உள்ள முஸ்லிம்களது உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் யார் உத்தரவாதம் அளிப்பது. முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு மாறாக புலிகள் தொடர்ந்தும் வடக்கு, கிழக்கில் முஸ்லீம்களை துன்புறுத்தி, கொலை செய்து வருகிறார்கள். இப்போது வடக்கில் இருந்து அனைத்து முஸ்லீம்களையும் வெற்றிகரமாகத் துரத்திவிட்டனர்.

இடைக்கால சுயாட்சி அதிகாரசபை அமைக்கப்பட்டால் புலிகளின் கைகளில் முஸ்லீம்கள் வேதனைக்கு உள்ளாவார்கள் என அஞ்சுவதில் நியாயம் உள்ளது.

புலிகள் முஸ்லீம் மக்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு; அதற்கு மதிப்பளிப்பதும் அவர்களுடைய சகல உரிமைகளுக்கும் உத்தரவாதம் வழங்குவதை உறுதிப்படுத்துவதும் மிகவும் அவசியம். முஸ்லீம்களது அச்சத்தினைப் போக்க புலிகள் இதுவரை எதுவும் செய்யவில்லை. மாறாக முஸ்லீம்களது பொருளாதாரம் உட்பட உரிமைகளை அழிக்கவும் பலவீனப்படுத்தவும் புலிகள் எல்லா முயற்சிகளும் எடுத்து உள்ளனர்.

இக்காரணங்களால் புலிகள் இறுதியாகத் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்ததும் அரசாங்கம் அதற்கு அமைதியாக இருந்ததும் சமாதான முயற்சிகளில் முஸ்லீம்களுக்கு இருந்த கொஞ்ச நம்பிக்கையையும் இழக்கச் செய்தது. முஸ்லீம்கள் தங்களுக்குரிய சட்டரீதியான (Legitimate Rights) உரிமைகளுக்கு மேலாக எதையும் கேட்கவில்லை. புலிகள் உதவும் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என முஸ்லீம்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்போது அவர்கள் புலிகள் மீது நம்பிக்கை வைக்க முடியும்.

புலிகளின் திட்டத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு அமைந்து புலிகளின் கைக்கு வடக்கு கிழக்கின் அதிகாரம் சென்றால்; வடக்கில் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டதைப் போல்; கிழக்கிலும் முஸ்லீம்களை அவர்களது வீடுகளை விட்டு விரட்டி விட்டு புலிகள் தனி இனஅரசை அமைத்துவிடுவார்கள் என முஸ்லீம்கள் அஞ்சுகிறார்கள்.

புலிகள் தீர்வுத் திட்டத்தை முன்வைத்ததைத் தொடர்ந்து முஸ்லீம் சமூகத்தின் மத்தியில் அதிருப்தி அதிகரித்து வருவதை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்று திருகோணமலையில் நிலைமைகள் கவலை அளிப்பதாக உள்ளது. கடந்த சில வாரங்களாக இடம் பெற்ற சம்பவங்கள் புலிகள் முஸ்லீம்களை கிழக்கில் இருந்து வெளியேற்றுவதற்கான பயங்கரவாத நடவடிக் கைகளை ஆரம்பித்து இருப்பதையே தெளிவாகக் காட்டுகிறது. வடக்கு கிழக்கு யுத்தத்தில் முஸ்லீம்கள்

www.tamilarangam.net



பெருமளவில் பாதிக்கப்பட்ட சமூகமாக உள்ளனர். அரசாங்கமும் புலிகளும் முஸ்லீம்களுக்கு செவிசாய்க்க வேண்டும். முஸ்லீம்கள் தங்கள் தரப்பு நியாயத்தை முன்வைக்க தேவையான காலத்தை வழங்க வேண்டும்.

சமாதானத்தையும் செழிப்பையும் இலங்கைத் தீவின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளாமல் அதைப் பற்றிப் பேசமுடியாது. வட கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லீம் மக்களுக்கு இடையே சமாதானம் ஏற்படாமல் இலங்கையில் சமாதானம் சாத்தியம் இல்லை என்பதே உண்மை.

ஆகவே எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம் தரப்பும் தங்கள் நிலைப்பாட்டை முன்வைக்க தனித் தரப்பாக கலந்து கொள்ள வேண்டும். சர்வதேச சமூகம் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ் மக்களுடைய கேள்விக்கு தீர்வு ஏற்படும் அதே சமயம் முஸ்லீம்களது கேள்விக்கும் தீர்வு காணப்படுவது மிகவும் அவசியம். எதிர்காலப் பேச்சு வார்த்தைகள் முஸ்லீம்களது தேசியம், பாரம்பரிய தாயகம், அவர்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைய வேண்டும்.

கிழக்கில் முஸ்லீம்கள் தமிழர்களுடன் சம பங்காளிகள். 1901-1931 சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி அங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் மட்டுமே அண்ணளவாக சமஎண்ணிக்கையில் வாழ்ந்து உள்ளார்கள். 7ம் நூற்றாண்டு முதல் முஸ்லீம்கள் அங்கு வாழ்ந்து உள்ளனர். இதனை ஏற்றுக் கொள்வது நூற்றாண்டுகளாக வடக்கில் வாழ்ந்து இடம்பெயர்ந்த முஸ்லீம்களை மீளக் குடியமர்த்த வழியமைக்கும்.

முஸ்லீம் சிறுபான்மையினருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வை முன்வைக்காமல் அவர்களை முற்றாக நிராகரித்து விட்டு 'சமாதானம்', 'விளங்கிக்கொள்தல்' என்ற பதங்களை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பயன்படுத்துவது அர்த்தமற்றது.

முஸ்லீம்களது உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தாது; ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வடக்கு கிழக்கு பிரச்சினைக்கோ, அப்பகுதியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவோ முன்வைக்க முடியாது. ஆகவே நிரந்தர தீர்வை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கான எதிர்காலப் பேச்சு வார்த்தைகளில் முஸ்லீம்களின் செயற்திறன் மிக்க பங்குபற்றுதல் அவசியம்.

இந்த உண்மை விளங்கிக் கொள்ளப்படாமலும் சரியாகத் தெரிவிக்கப்படாமலும் விட்டால் நிரந்தர சமாதானம் ஏற்படுவது சாத்தியம் இல்லை என்பதே எங்களது பார்வை. இதனால் சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்க நேரிடும் அபாயம் உள்ளது. முஸ்லீம்கள் தங்கள் பிரச்சினைகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்ற நம்பிக்கையையும் இழக்க நேரிடும்.

(இலண்டனில் செயற்படும்
Council of North & East Muslims of Sri Lanka
அமைப்பின் சார்பில் ஆங்கிலத்தில் இக்கட்டுரை தேசம்
சஞ்சிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டது)

## கூலி அதிகம் தேவையில்லை

மட்டுவில் ஞானக்குமாரன்.

எதற்காகத்
தயங்குகிறீர்கள் எசமானர்களே..?
நீங்கள் ஏய்த்துப் பிழைக்கும் வர்க்கமென
தெரிந்து விடுகிறதே என
கலங்க வேண்டாம்.

இதோ
எங்களில் சிலர்
உங்களுக்குத் தோள் கொடுக்கத்
தயாராகி விட்டார்கள்

உடன் பிறந்தவர் போலே
ஒட்டுவார்
தன் மேலேயே
தீயையும் கொட்டுவார்


தமிழை
சிதைப்பார்
வடமொழிக்குக் குடைவிரிப்பார்
தேவைப்படின்
வேட்டியையும் உருவி
கம்பளம் விரிப்பார்
பாதம் தாங்கும் செருப்பாய்
இருப்பார்

அவர்களுக்கு
அதிகபட்ச ஊதியமெல்லாம்
குந்த ஒரு கதிரையும்
நக்க ஒரு எலும்பும் மட்டுமே

கூலி
அதிகமாகுமென்று
அலட்டிக்கொள்ளத் தேவையில்லை

நக்க ஒரு எலும்பும்
குந்த ஒரு பாராளுமன்றக் கதிரையும்
இருந்தாலே போதும்

www.tamilarangam.net




சமாதானப் பேரணியும் நூல் வெளியீடும்

### பி ஏ காதரின் நூல் வெளியீடு :

# 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்' என்ன?

பி ஏ காதரின் 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்' நூல் வெளியீடு டிசம்பர் 27ல் வடக்கு இலண்டனில் இடம்பெற்றது. இதற்கு சிறப்பு அதிதிகளாக இலங்கை சமூக அபிவிருத்தி அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், சமூக அபிவிருத்தி அமைச்சு அலுவலர் டி என் அன்பரசு ஆகியோர் அழைக்கப்பட்டு இருந்தனர். இவ் அரசியல் தலைவர்களைக் கொண்டு மறுநாள் சமாதானப் பேரரங்கு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

இந்நிகழ்வுகளை CENRE for CULTURE, PEACE and DEVELOPMENT (CCPD) அமைப்பு ஏற்பாடு செய்தது. சட்டத்தரணியும் அரசியல்வாதியுமான தருமகுலசிங்கம் (டென்மார்க்), நூலாசிரியர் பி ஏ காதர் (இலண்டன்), அப்பால் தமிழ் ஆசிரியர் கி பி அரவிந்தன் (பாரிஸ்) ஆகியோர் இதன் முக்கிய உறுப்பினர்களாவர்.

இலண்டன் அரசியல் ஆர்வலர்கள் மட்டத்தில் காதரின் புத்தக வெளியீடு பற்றியும் அவரது அரசியல் நிலைப்பாடு பற்றியும் அதிருப்தி நிலவியிருந்தது. இதற்கென பாராளுமன்ற அரசியல்வாதிகளை அழைத்து நூல் வெளியீடு செய்வது பற்றிய சர்ச்சையும் காணப்பட்டது. இதனால் அவரது முதலாவது நூல் வெளியீட்டு விழாவை முன்னின்று நடத்தியவர்களும் அரசியல் ஆர்வலர்கள் பலரும் விழாவில் இருந்து பின்வாங்கினர்.

இடதுசாரி அரசியல் ஆர்வலரும் முன்னாள் ஆசிரியருமான க தங்கவடிவேல், அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம் ஆகியோர் நூலை விமர்சனம் செய்தனர். மார்க்சியப் பார்வையில் தேசிய இனங்களின் பிரச்சினைகளை ஆராய்ந்துள்ளதை அவர்கள் வரவேற்றனர். ஆனால் விமர்சனம் செய்கின்ற அளவிற்கு இந்நூல் விரிவாக இல்லை என்பதை நாசுக்காகச் சுட்டிக்காட்டினர். 80 பக்க நூல் இன்னமும் விரிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

தற்போதுள்ள நிலையில், அன்று இனப்பிரச்சினை இருந்திருக்கவில்லை. சிங்கள, தமிழ் தேசிய முதலாளிகளின் பாராளுமன்ற போட்டியே இவ்வளவு விசமத்தனமான நிலைக்கு இட்டுச் சென்றது. இதற்கு அவர் சிங்கள, தமிழ் இனவாதிகள் என இருசாராரையும் சாடினார். சிங்கள இனவாதத்துக்குப் பதிலாக வைக்கப் பட்ட ஆண்ட பரம்பரை ஆழ நினைப்பது போன்ற தமிழ் இனவாத கோசங்கள் உண்மை நிலையைத் தவறவிட்டு விட்டது. சிங்கள நிலப்பிரபுத்துவத்துக்கும் தமிழர்களின் உயர்கல்வி கற்ற மேட்டுக் குடியினருக்கும் இடையிலான மோதலில் சுயநிர்ணய உரிமை அடிபட்டுப் போனது. வர்க்கக் கண்ணோட்டத்தின் அவசியத்தை ஆணித்தரமாகத் தெரிவித்த அவர் இன முரண்பாடு களைத் தீர்க்க சோசலிசமே மருந்து என்றார்.

எங்களுக்குத் தொடர்பில்லாத ஐரோப்பிய தேசிய இயக்கங்கள் பற்றியே நூல் பேசுகிறது. ஆனால் ஐரோப்பாவில் தான் தேசிய இயக்கங்கள் அரசியல் வடிவம் பெற்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

இறுதியில் இலங்கையில் சிறுபான்மையினங்கள் அனுபவித்த ஒடுக்குமுறையிலும் அதிகமாக சாதிய அடிப்படையில் மக்கள் ஒடுக்கப்பட்டனர். இவர்களும் ஒரு சிறுபான்மை இனமாகக் கொள்ளப்பட்டு அவர்களுக்குமாக குரல் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஒரு கவிஞனின்

"புலிகளின் துப்பாக்கிகளின் நிழலின் கீழ்
சாதியம் தூங்கிக் கொண்டிருக்கிறது."

என்ற வரிகளுடன் விமர்சனத்தை நிறைவு செய்தார்.

நூலின் முன் பக்க அட்டையில் சுரங்கப்பாதையின் முடிவில் மார்க்ஸின் முகம் சித்தரிக்கப்பட்டு வெளிச்சம் தெரிகிறது. இருண்ட சுரங்கப்பாதை பின் அட்டையாக உள்ளது. அது மார்க்ஸிய வழிகாட்டலின் அவசியத்தை காட்டுவதாக சிவலிங்கம் குறிப்பிட்டார். தத்துவம் இல்லாத நடைமுறை குருட்டுத் தனமானது நடைமுறைக்கு உதவாத தத்துவம் மலட்டுத்தனமானது என்றும் ஓர் எடுகோளை அவர் மேற்கோள்காட்டினார்.

வெவ்வேறு அமைப்புகளைச் சார்ந்த சிறைக் கைதிகள் வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து செயற்பட்டு உள்ளனர். நூலில் காதரின் சிறை அனுபவங்களில் இது குறிப்பிடப்பட்டு உள்ளது. எங்கள்

www.tamilarangam.net



அரசியல்வாதிகளும் சிறை சென்று இந்த அனுபவத்தைப் பெற வேண்டும் என அவர் கூறினார்.

மேலும் பிஸ்மார்க்கின் சர்வாதிகாரம் ஜேர்மனியை ஐக்கியப்படுத்தியதை கால்மார்க்ஸ் ஆதரித்த போதும் அச்சர்வாதிகாரத்தையும் பிற்போக்குத் தனத்தையும் மார்க்ஸ் கடுமையாக விமர்சித்தார். இச்சமயத்தில் மிகவும் உணர்ச்சி வசப்பட்ட சிவலிங்கம் அவ்அரசியல் சூழலை இன்றைய வடக்கு கிழக்கு நிலைமைகளுடன் ஒப்பிட்டுக் காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி இனவாதத்தைத் தூவி அமெரிக்க, இஸ்ரேலிய கூட்டை ஏற்படுத்தியது. அதுவே இந்திய ஆக்கிரமிப்புக்கு காரணமானது. இது பற்றி ஆராயப்படாததையும் சிவலிங்கம் சுட்டிக்காட்டி விமர்சனத்தை நிறைவு செய்தார்.

நூல் வெளியீட்டுக்கு இலங்கையில் இருந்து பெரும் செலவில் வந்த அதிதி கள் நூல் பற்றி குறிப்பாக எதுவும் தெரிவிக்கவில்லை. அவர்கள் அந்நூலை வாசித்தார்களா என்ற கேள்வியும் எழுந்தது. அவர்களின் நோக்கம் நூல்வெளியீடு அல்ல என்பதும் அங்கு புலப்பட்டது.

பதிலளித்த காதர் நூல் விரிவாக எழுதப்படாததை ஏற்றுக் கொண்டார். நேரமின்மை, இன்றைய நிலையில்நூலின் அவசியம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார். கால்மார்க்ஸின் **'மூலதனம்'** வெளிவருவதற்கு முன் அதன் சாரம்சம் சிறு சிறு நூல்களாக வெளிவந்தது. தனது நூலும் அவ்வாறான ஒன்று எனக் குறிப்பிட்டார்.

இன்று நூல் விமர்சனம் செய்தவர்களைப் பாராட்டிய காதர் தனது முன்னைய நூலை விமர்சனம் செய்தவர்களை மறைமுகமாக ஆனால் கடுமையாக சாடினார். அத்துடன் அரசியல் விமர்சனம் செய்யப்பட வேண்டிய முறை பற்றியும் விளக்கமளித்தார்.

தனது முடிவுரையில் சில புத்திஜீவிகள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் இந்நிகழ்ச்சிகளை குழப்ப முற்பட்டதாகக் குறிப்பிட்ட காதர். இவர்கள் டெனிஸ் நாவலான ரோஜாக்களும் நத்தைகளும் என்ற நாவலில் வரும் நத்தைகள் என்று சாடினார். ரோஜாக்கள் வெட்டப்படும் போது நத்தைகள் ஓட்டில் இருந்து வெளியே வந்து மகிழ்ச்சி ஆரவாரம் இடும். ஆனால் ரோஜாக்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. அவை இன்னும் கிளைவிட்டு செழிப்பாக வளரும் என்று குறிப்பிட்டார். தனது முதல் ரோஜாவாக அமைச்சர் சந்திரசேகரனைக் குறிப்பிட்ட அவர் பா உ செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தனக்கு ஆதரவாக இருந்த பலரையும் ரோஜாக்கள் எனக் கூறி நன்றி தெரிவித்து நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.❑

தொகுப்பு : த ஜெயபாலன்

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

SOLICITORS

Rengan N Devarajan

Immigration & Nationality

Employment

Land Lord & Tenant

Housing

Welfare Benefits

Matrimonial

Tel : 020 8478 5797

Fax : 020 8478 4486

1ST Floor

128 Ilford Lane, Ilford

Essex, IG1 2LE

www.tamilarangam.net



# சமாதானத்தின் பெயரால்



த ஜெயபாலன்

டிசம்பர் 28ல் சமாதானப் பேரணி சட்பறி உயர் பள்ளியில் CCPD ஆல் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி பேரணி என்று குறிப்பிட்ட போதும் ஒரு கூட்டமாகவே நடைபெற்றது. நூல்வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டவர்களுடன் அமைச்சர் எச் எம் அஸ்வர், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் அமைச்சின் ஊடக இயக்குநர் சதீஸ்குமார் ஆகியோரும் பல பேச்சாளர்களும் கலந்து கொண்டனர்.

அழைப்பில் குறிப்பிட்டபடி நோர்வே அரசின் பிரதிநிதிகளோ, ஐரோப்பிய பாராளுமன்றப் பிரதிநிதிகளோ, பிரித்தானிய அரச பிரதிநிதிகளோ கலந்துகொள்ளவில்லை. நியூகாம் உள்ளாட்சி மன்ற உறுப்பினர் போல் சத்தியநேசன், கரோ மேயர் மனோ தர்மராஜ் போன்ற பிரித்தானிய அரசின் தமிழ் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவில்லை. நோர்வே, ஐரோப்பிய பாராளுமன்றப் பிரதிநிதிகள் கலந்து கொள்வதையிட்டு சமாதானப் பேரரங்கில் கணிசமான அரசியல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக முஸ்லீம் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

பி ஏ காதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் டி என் அன்பரசு இலங்கையில் சமாதானம் மலர்வது புலம்பெயர்ந்தவர்களுக்கும் சாதகமாக இருக்கும் எனக் குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய தர்மகுலசிங்கம் மக்கள் அமைப்புகள் செயற்திறனுடன் இயங்கி அரசுகளுக்கு அழுத்தத்தை கொடுத்து சமாதானத்தை நகர்த்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அடுத்து வி சிவலிங்கம் சமாதானம் கோசங்களால் அல்லது பொய் வாக்குறுதிகளால் அல்லது போலியாக அமையக் கூடாது என்று தனது பேச்சை ஆரம்பித்தார். சமாதானத்தின் தோல்விக்கு இலங்கை அரசுகள் மட்டும் காரணமில்லை தமிழ் தலைமைகளும் காரணம் எனக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் அரசியற் படுகொலைகள், சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்தல், கடுமையான வரி விதிப்பு என புலிகள் தரப்பில் விடப்பட்ட தவறுகளையும் சுட்டிக்காட்டினர். (கட்டுரை முழுமையாக தரப்பட்டு உள்ளது.)

அச்சமயத்தில் பெண்கள், குழந்தைகள் நிறைந்து இருந்த மண்டபத்தில் கிழக்கு இலண்டனைச் சேர்ந்த முருகானந்தன் என்பவர் தகாத வார்த்தைகளை அள்ளி வீசியபடி எழுந்து எல்லோரையும் அல்லோல கல்லோல ப்படச் செய்தார். முருகானந்தனும் இன்னும் இருவரும் குழப்பம் விளைவித்து தங்களை புலிகளின் பிரதிநிதிகளாகக் காட்ட கடுமையாக முயற்சித்தனர். அதில் வெற்றியும் கண்டனர்.

அவர்களை கட்டுப்படுத்துவதில் தலைமைதாங்கிய காதர் மட்டும் முயற்சி எடுத்தார். ஆனால் பலன் அளிக்கவில்லை. மற்றும் ஏற்பாட்டாளர்களான கி பி அரவிந்தன், தருமகுலசிங்கம், சமாதானம் பேச வந்த அமைச்சர் சந்திரசேகரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் மௌனம் சாதித்தனர். தங்கள் உரைகளிலும் கருத்துச் சுதந்திர மீறலை அவர்கள் கண்டிக்கவில்லை.

எங்கள் தலைவன் செல்வத்தைப் பேசவிடு என்று முருகானந்தன் கத்தினார். சிவலிங்கத்தின் கருத்துச் சுதந்திர உரிமை பறிக்கப்பட்டு அவர் பேச முடியாது போனது. பின்னர் அங்கு இருப்பது பாதுகாப்பில்லை என பலரும் கூறியதால் அவர் உடனடியாக கூட்டத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டார். இதன் மூலம் கூட்டத்தின் நோக்கத்திற்கான முதலாவது தோல்வி ஏற்பட்டது. அதனை அடுத்து பல இளைஞர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

அண்மைக்காலமாக வி.புலிகள் தாம் வெறுமனே ஒரு இராணுவ அமைப்பு அல்ல ஒரு ஜனநாயக அமைப்பும் கூட என்பதை நிலைநிறுத்த முயற்சி எடுத்து வருகின்றனர். சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் தலைவர் பிரபாவிடம் கேட்கப்பட்ட கடுமையான, சீண்டும் விதமான கேள்விகளுக்கும் அவர் சாணக்கியமாகப் பதிலளித்து தாங்கள் ஜனநாயக அரசியலுக்குத் தயார் என்பதை காட்டியுள்ளார். ஆனால் சிலர் சுயவிளம்பரத்திற்காக விடுதலைப் புலிகளைத் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் காட்ட முற்படுவது துரதிஸ்டவசமானது. பல்வேறு சமூகத்தவர் களும் குறிப்பாக முஸ்லீம் சமூகத்தவர்கள் நிறைந்திருந்த மண்டபத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத புலிகளுக்கு வீண் பழியைப் பெற்றுக்கொடுத்து உள்ளது.

அதனைத் தொடர்ந்து பா உ செல்வம் அடைக்கலநாதன் பேசினார். எனக்கு முன் பேசிய சிவலிங்கம் அண்ணன் ஒரு கருத்தைச் சொல்லி

www.tamilarangam.net



இருக்கிறார். நான் அவரிடம் ஒன்றைச் சொல்ல இருக்கிறேன். ஒரு நேரத்தை ஒதுக்குங்கள் நீங்கள் இங்கு பேசிய விடயங்களை நானும் வருகிறேன் ஒரு கருத்துப் பரிமாற்றத்தை நாங்கள் செய்து பார்ப்போம். நியாயம் யார் பக்கம் இருக்கிறது என்பதைப் பார்ப்போம் என்று கூறினார். அச்சமயத்தில் ஆய்வாளர் சிவலிங்கம் அங்கிருக்கவில்லை.

செல்வம் தொடர்ந்து பேசுகையில் புலிகளுடன் ஒன்றுபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். முஸ்லீம் சமூகத்தை புறக்கணித்துவிட்டு எந்தத் தீர்வையும் பெற முடியாது. முஸ்லீம் மக்களையும் மலையக மக்களையும் இணைத்து ஒற்றுமையுடன் செயற்படுவோம் என்று கூறினார். மேலும் தாங்கள் இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட்டது துரோகத்தனமானது என்றும் இனிமேல் எப்போதும் புலிகளுடன் இணைந்து செயற்படுவோம் என்றும் கூறி சபையோரின் கைதட்டுகளைப் பெற்றார். ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எதிராக கடுமையான தாக்குதலைத் தொடுத்தார். வரவு செலவுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி 5000 கோடி ரூபாயை ஒதுக்கியது சீருடை வாங்குவதற்கா? என்று கேள்வி எழுப்பினார். சிங்கள் மக்கள் எதிரிகள் அல்ல என்று குறிப்பிட்ட செல்வம் தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பவர்களே எங்கள் எதிரிகள் என்று குறிப்பிட்டார். சிங்கள மக்கள் இனவாதிகளைத் தூக்கி எறிந்துவிட்டு எம்முடன் சேர



செல்வம் அடைக்கலநாதன்



வி சிவலிங்கம்

வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். எங்களுக்குப் போர் வேண்டாம். நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டால் ஈழமோ அல்லது ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வோ ஏற்படும். இன்றைக்கு எங்களுடைய மக்கள் விடுதலைப்புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றார் செல்வம். நாங்கள் எல்லோரும் அவர்களுடன் அணி திரண்டு எங்கள் உரிமையை வென்றெடுப்பதற்கான ஆணையை நீங்கள் தர வேண்டும் என்று கேட்டுத் தனது நீண்ட உரையை முடித்தார்.


**கவலைகளை களைந்தெறியுங்கள்**

**IMMIGRATION**

அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் - மேன் முறையீடுகள்,
நாடுகடத்தலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்
மனித உரிமை விண்ணப்பங்கள்
அனைத்து விண்ணப்பங்களுக்கும்

**நீண்டகால அனுபவமுள்ளவரும் அண்மைக் காலத்தில் கூடுதல் மேன்முறையீட்டு வழக்குகளில் வெற்றி பெற்றவருமான எமது இயக்குனர் திரு குலேந்திரனை அணுகுங்கள்.**

International Refugee Organisation

1083 Garratt Lane
London
SW17 0LN
(Tooting Broadway - 2 mins from tube)

Tel : 020 8682 4494
020 8682 9480
Fax : 020 8682 9922
Mobile : 079 6107 1875

www.tamilarangam.net





செல்வம் அடைக்கலநாதன் அமர்ந்ததும் அங்கு காத்திருந்த இளைஞர்கள் சிலர் சபையில் இருந்து எழுந்து வந்தனர். கருத்துச் சுதந்திரத்தை மறுத்து சமாதானம் பேசமுடியாது. சிவலிங்கத்தினுடைய கருத்துடன் எங்களால் ஒத்துப்போக முடியாது விட்டாலும் அவருடைய கருத்து சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் குரல் எழுப்பினர். ஜனநாயக நாட்டில் வாழ்ந்து கொண்டு உரிமையை மறுக்க யாருக்கும் உரிமை இல்லை எனத் தெரிவித்தனர். மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துவரும் வாசுதேவனின் கூற்று சபையோரால் பாராட்டப்பட்டு பலத்த கரகோசத்தைப் பெற்றது. மீண்டும் குறுக்கிட முற்பட்ட முருகானந்தத்தை இடை மறித்த வாசுதேவன் இந்த மாதிரியான அராஜகவாதிகள் இருக்கும் மட்டும் எமக்குத் தமிழீழம் கிடைக்கப் போவதில்லை எனக் கூறினார்.

சபையைக் கட்டுப்படுத்த முயன்ற காதர், மாறுபட்ட கருத்துடையவர்கள் இங்கு இருக்க வேண்டும். அந்தக் கருத்தைச் சொல்வதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் இப்படியான கருத்தரங்குகள் இந்த மண்ணிலே நடக்காது எனத் தெரிவித்தார். நீங்கள் செல்வம் அடைக்கலநாதன் பேசும் போது கைதட்டினீர்கள். ஆனால் இரு ஆண்டுகளுக்கு முன்னர் அவரைச் சுடுவதற்கு துப்பாக்கி தூக்கிக் கொண்டு திரிந்தீர்கள். முருகானந்தம் போன்ற குழப்பவாதிகள் சபைக்கு லாயக்கில்லாதவர்கள் என காதர் எச்சரித்தார். செல்வம் பேசும் போது அவருடைய கருத்தை ஏற்காதவர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் குறிக்கிடவில்லை நாகரீகமாக நடந்து கொண்டார்கள் என காதர் கூறினார். பின் முருகானந்தம் நழுவித் தலைமறைவானார். கூட்டம் தொடர்ந்தது.

முஸ்லீம் பிரதிநிதிகள் பலரும் அங்கு பேசினர். ஆசா மொகமட் என்பவர் இந்துத் தமிழ் மக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான இன உறவுகளை தனது அனுபவங்களிற் கூடாகக் கூறினார். தமிழ் என்பது இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமான பொதுவான மொழி. அதனை ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் உரிமை கொண்டாட முடியாது. அதே சமயம் தமிழர்கள் என்று கூறிக்கொண்டு முஸ்லீம்களது தனித்துவத்தையும் எமது உரிமைகளையும் அங்கீகரிக்க மறுத்தால் இந்து மத ஆதிக்கத்தை எம்மீது திணிப்பதாகவே அர்த்தப்படும் என்று குறிப்பிட்டார்.

13 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு புத்தளத்திலும் மன்னாரிலும் வாழும் முஸ்லீம்கள் மீளவும் அங்கு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஸ்ரீலங்கா இஸ்லாமிக் போறத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட நஜாப் மொகமட் குறிப்பட்டார். முஸ்லீம்களின் உரிமைகள் மறுக்கப்பட்டால் இன்னொரு போராட்டம் வெடிக்கும் எனவும் அவர் கூறினார். முஸ்லீம்கள் மீது சமாதானத்தை திணிக்க முயற்சிக்கக் கூடாது என்று குறிப்பிட்ட அவர் முஸ்லீம்களின் பிரச்சினையைத் தீர்க்காமல் வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றார்.


மலையக மக்கள் 200 ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள் என்று தனது பேச்சில் குறிப்பிட்டார் அமைச்சர் சந்திரசேகரன். மலையகமக்களின் வாழ்க்கை பல்வேறு வகையிலும் தாழ்த்தப்பட்டு இருப்பதை விளக்கினார். யுத்தம் நடந்தால் தான் சமாதானம் வேண்டும் என்பதல்ல; நாளை மலையகத்தில் ஒரு யுத்தம் ஏற்படாமல் இருக்கவும் அரசாங்கம் சமாதானத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாங்களும் துப்பாக்கி தூக்கி 50 வருடங்கள் போராட வேண்டுமா? என்றார். இப்பிரச்சினையைத் தீர்க்க என்ன வழி எனக் கேள்வி எழுப்பினார். வடகிழக்கு மக்களோடு கரம் கோர்த்து அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும் என்றும் பதிலளித்தார்.

கோணம் அமைப்பின் சார்பில் கலந்து கொண்ட கலாநிதி சித்திக் தான் தயாரித்து வந்த உரையை சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பேசமுடியாது உள்ளது என்றார். அவர் ஒரு பிரேரணையை சமர்ப்பித்தார். ஏற்கனவே சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதால் உடனடியாக அதனைச் சேர்க்க முடியாது என்றும் அதனை சேர்க்க முயற்சிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பேரரங்கில் எந்த தீர்மானமும் முன்வைக்கப்படவில்லை.

பேரரங்கின் நோக்கம் சமாதானம் பற்றியதாக இருந்திருந்தால் அந்நோக்கம் நிறைவேறியது என்று கொள்ள முடியாது. அரசியல்வாதிகளுக்கு மேடை கொடுத்ததாகவே இப்பேரரங்கு முடிவடைந்தது. ஆனால் கருத்துப் பரிமாற்றங்கள், சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற வகையில் இப்பேரரங்கு வரவேற்கப்பட வேண்டிய விடயம். ❑

www.tamilarangam.net





கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டதைக் கண்டித்து வாசுதேவன் உரிமைக் குரல் எழுப்புகிறார். சபையோர் வாசுதேவனின் கருத்தை உன்னிப்பாக செவிமடுக்கின்றனர்.

# சமாதானத்தின் பெயரால் ஆட்கடத்தலா ?

அமைச்சர் சந்திரசேகரன், பா உ செல்வம் அடைக் கலநாதன் ஆகியோரின் விமானம் தரையிறங்க முன்னரேயே இவர்களின் வருகை சந்தேகத்துடன் நோக்கப்பட்டது. இவ்வாறு டென்மார்க்கில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வைப் பயன்படுத்தி ஆட்கள் கடத்தப்பட்டதாக குற்றச்சாட்டுகள் வெளிவந்தது.

மேலும் சமாதானப் பேரரங்கிற்கு தலைமை தாங்க இருந்த த சோதிலிங்கம் (பி ஏ காதருடன் சிறையில் இருந்தவர்) அப்பொறுப்பை ஏற்க முடியாது என மறுத்து விட்டார். "தலைமை தாங்குவது தனது அடிப்படை நேர்மையைக் கேள்விக்குள்ளாக்கும்" என்று CCPD செயலாளர் காதருக்கு டிசம்பர் 16ல் தெரிவித்தார்.

சோதிலிங்கத்திற்கு பதிலளித்த பி ஏ காதர், தனக்கும் சோதிலிங்கத்திற்கும் இடையே இடம்பெற்ற உரையாடலை கடிதத்தில் தொகுத்து உள்ளார். அதில் "எமது நிதிச்செயலாளர் திரு. தர்மகுலசிங்கம் கடந்த தடவை எனது புத்தக வெளியீட்டை டென்மார்க்கில் ஏற்பாடு செய்தபோது சிறப்பு விருந்தினராக அழைக்கப் பட்ட அமைச்சர் சந்திரசேகரன் இலங்கையிலிருந்து வரும்போது இருவரும் சேர்ந்து நான்கு பேரை இறக்குமதி செய்தனர். அமைச்சர் சந்திரசேகரனும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அடைக்கலநாதன் செல்வமும் இந்த சமாதான பேரரங்கு என்ற பெயரால் ஆட்களை இங்கு ஏற்றுகிறார்கள்." என்ற குற்றச்சாட்டு களை சோதிலிங்கம் வைத்ததாக காதர் குறிப்பிட்டு உள்ளார். (இக்கடிதங்களின் பிரதிகள் எம்மிடம் உண்டு.)

ஆனால் இக்குற்றச்சாட்டுகளை காதர் முற்றாக மறுத்ததுடன் வேண்டாதவர்களின் புரளியெனவும் சாடியிருந்தார். இக்குற்றச்சாட்டு தொடர்பாக அவர் புத்தக வெளியீட்டு விழாவில் குறிப்பிடும் போது கற்பனையாகவும் இருக்கலாம் உண்மையாகவும் இருக்கலாம் ஆனால் எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் "மலையகத்தின் அந்த முக்கிய அரசியல் புள்ளி சமாதானத்தின் பெயரால் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆட்களை அள்ளிக்கொண்டு போனது தொடர்பான தகவல்கள் இப்போதுதான் அம்பலமாகி உள்ளது." என டிசம்பர் 14 தினக்குரல் அரசியல் கட்டுரையில் ஒரு செய்தி வந்தது. அதே பத்திரிகையில் ஜனவரி 4ல் "நாட்டில் சமாதானம் வருமோ வராதோ அது வேறுவிடயம். ஆனால், ஆளும் கட்சியிலுள்ள ஒரு முக்கிய அரசியல் புள்ளி சமாதானத்தின் பேரால் ஆட்களை அள்ளிக் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அள்ளியெடுப்பதும், வடக்கு புனர்வாழ்வுக்கு பொறுப்பானவர் தன்னைப் புனரமைத்துக் கொண்ட விடயங்களும் உரிய இடத்தில் சொல்லப்பட்டுள்ளதாம். பொறுத்திருந்தால் உண்மை தெரியுமென்கிறார்கள்." என மற்றுமொரு செய்தியும் வெளிவந்தது.

மேலும் காதரின் 'சுயம் நிர்ணயம் உரிமை' நூலின் 1000 பிரதிகளை அமைச்சர் சந்திரசேகரன் வாங்கி உள்ளார். அவரின் 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்' என்ற இரண்டாவது நூலின் கணிசமான பிரதிகளை வாங்க உள்ளதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார். மலையக எழுத்துத் தளம் மிகவும் நொடிந்து போயிருக்கும் போது அப்பிரதேசத் தின் அமைச்சர் புலம்பெயர்ந்த மண்ணில் வெளியிட்ட நூலின் பிரதிகளை தொகையாக கொள்வனவு செய்தமை மிகுந்த சந்தேகத்துடன் பார்க்கப்படுகிறது.

இது உட்பட அமைச்சரிடம் பல விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள பேட்டி ஒன்றுக்கு தேசம் சஞ்சிகை முயற்சி செய்தது. 7 தடவைகள் ஏற்பாட்டா ளர்கள் தருமகுலசிங்கம், காதர் ஊடாக முயற்சி எடுத்தோம். அமைச்சரும் பேட்டி தருவதாக உறுதி அளித்தார். 4 தடவைகள் நேரம் தரப்பட்டு காத்திருந்தும் இறுதிவரை அமைச்சர் பேட்டி தரவில்லை. ஜேர்மன் சென்றுள்ள செல்வம் அடைக்கலநாதன் இலண்டன் திரும்பியதும் பேட்டி தருவதாகத் தெரிவித்து உள்ளார்.



அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தர எதிரிகளும் இல்லை.விரோதிகளாக இருந்த இருவரும் மீண்டும் சேர்ந்தனர். அமைச்சர் சந்திரசேகரன், காதரிற்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பதிலுக்கு காதர் அமைச்சரை தனது

www.tamilarangam.net



மிகப் பெரும் மனித உரிமை மீறல்

# சிறப்பு முகாம்

எஸ் பாலச்சந்திரன்

முன்னாள் சிறப்பு முகாம் கைதி

உலகில் உள்ள நாடுகளில் யுத்த நிறுத்தம், ஒப்பந்தங்கள் ஏற்பட்டவுடன் முதலில் நிகழ்வது நல்லிணக்க அடிப்படையிலான கைதிகளின் விடுதலை ஆகும். இதுவே இதுவரை வழக்கமாக இருந்து வருகின்றது. ஆனால் இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகிய பின்னரும் கூட, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்தும் சிறை வைக்கப்பட்டு இருப்பது ஆச்சரியமாகவும் வேதனையாகவும் உள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் குறிப்பாக சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ் அகதிகள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. சிறப்புமுகாம் என்னும் பெயரில் சிறையிலும் கொடிய சித்திரவதை முகாமாக இந்தியாவில் தமிழ்நாட்டில் பல வருடங்களாக இயங்கி வரும் இம்முகாம்கள் உடனடியாக மூடப்பட வேண்டும். அங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் உடனடியாக எவ்வித நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். இதற்காக அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுக்க முன் வரவேண்டும் என்று தேசம் சஞ்சிகை விரும்புகின்றது.

சிறப்புமுகாம்களில் பலவருடங்களாக அடைத்து வைக்கப்பட்டு பல்வேறு சித்திரவதைகளையும் கொடுமைகளையும் அனுபவித்து ஒருவாறு விடுதலை பெற்றவர்களில் சிலர் தற்போது இலண்டனில் வசிக்கிறார்கள். அவர்களில் சிலரின் கசப்பான அனுபவங்களை இவ்விதழில் தருகின்றோம்.

## பாலச்சந்திரன் :

(வயது 40. சிறப்பு முகாமில் 8 வருடங்களுக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டிருந்தவர். தற்போது இலண்டனில் வசிக்கிறார். அட்டைப்படம் : தமிழ்நாடு பொலிஸார் பாலச்சந்திரனை நீதிமன்றத்துக்கு விலங்கிட்டு அழைத்துச் செல்கின்றனர்.)

நான் 12.3.1991 அன்று தமிழ்நாடு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டேன். என் மீது கொடைக்கானல் தொலைக்காட்சிக் கோபுரத்தை குண்டு வைத்துத் தகர்க்க முயற்சி செய்ததாக வழக்குப் பதியப்பட்டது. இவ்வழக்கில் நான் நிரபராதியென நீதிமன்றம் விடுதலை செய்தும், அவ்வாறு என்னை விடுதலை செய்யாமல் தொடர்ந்தும் சிறப்பு முகாமில் அடைத்து வைத்தனர். வேலூர், துறையூர், மேலூர் சிறப்பு முகாம்களில் மாறிமாறி அடைத்தனர். இவ்வாறு எட்டு வருடங்கள் அடைத்து வைத்தபின் இறுதியாக 1.5.1998 அன்று விடுதலை செய்தனர்.

சிறையில் வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் வசதிகள் கூட சிறப்பு முகாம்களில் எமக்குத் தரப்பட வில்லை. உண்மையில் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், சிறையிலும் கொடிய சித்திர வதை முகாமாகவே இவை இயங்குகின்றன. இது குறித்து நீதிமன்றம், மனித உரிமைகள் கமிஷன்கள், சர்வதேச மன்னிப்புச்சபை என்பவற்றில் முறையிட்டும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. மாறாகத் தொடர்ந்தும் கொடுமைகள் நிறைந்த முகாமாகவே இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## இரத்தினசபாபதி :

(வயது 45. வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆறு வருடங்களுக்கு மேலாக, தமிழ் நாட்டில் சிறைவைக்கப்பட்டிருந்தார். UNHCR மூலமாக அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு தற்பொழுது இலண்டனில் வாழ்கிறார்)

நான் வி.புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு நெருங்கிய உறவினன் என்பதால் தமிழ்நாடு பொலிசார் என் மீது பொய்வழக்குப் பதிவு செய்து திருச்சி சிறையில் அடைத்தனர். வழக்கு விசாரணை முடிந்ததும் துறையூர் சிறப்பு முகாமில் அடைத்தனர். அதன் பின்னர் வேலூர் சிறப்பு முகாமிலும் அடைக்கப்பட்டேன். நான் கப்பலில் தொழில் வாய்ப்புப் பெற்று செல்லவிருந்த ஆவணங்களைக் காட்டி என்னை விடுதலை செய்யுமாறு கேட்டும், தொடர்ந்தும் சிறப்பு முகாமிலேயே அடைக்கப் பட்டேன். இவ்வாறு ஆறு வருடங்கள் அடைக்கப்பட்டுப் பின் விடுதலையாகினேன். சிறையில் அடைபட்டிருந்த வேளையில் எனது மனைவியும் பிள்ளைகளும் சொல்லொணாத சோதனைகளுக்கு உள்ளாகினர்.


www.tamilarangam.net



## சுமதி :

(வயது 44. சுமார் பத்து வருடங்களுக்கும் மேலாகக் குடும்பத்துடன் சிறை வைக்கப்பட்டிருந்தவர். தற்போது அவர் மட்டும் இலண்டனில் அகதி அந்தஸ்து மறுக்கப் பட்ட நிலையில் வாழ்கிறார். ஏனையவர்கள் தற்போது தமிழ்நாட்டில் உ ள்ளனர்.)

1991ம் ஆண்டு ராஜீவ் காந்தி கொலையை அடுத்து என்னைக் கைது செய்த தமிழ்நாடு பொலிஸார், என் மீது தடாச்சட்டத்தின் கீழ் வழக்கு பதிவுசெய்து மதுரை மத்திய சிறையில் அடைத்து வைத்தனர். என் மீதான வழக்கில் எனக்கு ஜாமீன் வழங்கியதையடுத்து என்னை சங்கரன்கோவில் சிறப்புமுகாமில் அடைத்தனர். அங்கு பின்னர் என் கணவர் மற்றும் பெண் குழந்தைகள் இருவரையும் கொண்டுவந்து அடைத்தனர். பின்னர் எம்மை செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைத்தனர். சில வருடங்களின் பின் துறையூர் சிறப்பு முகாமிற்கு மாற்றினர். பின்னர் மீண்டும் செங்கல்பட்டு முகாமுக்கே திருப்பி அனுப்பினர். இவ்வாறு சுமார் 10 வருடங்கள் மாறிமாறிச் சிறப்பு முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டோம்.



சிறையில் அடைக்கப்பட்டு இருந்த சுமதியும் அவரது இரு பிள்ளைகளும். இப்பிள்ளைகளின் குழந்தைப் பருவமும் பள்ளிப் பருவமும் சிறைக்குள்ளேயே கழிந்தது.

பெயரளவில் குடும்பத்தோடு ஒரே முகாமில் அடைக்கப்பட்டிருந்த போதிலும் ஒருவரை ஒருவர் பார்க்க முடியாதவாறு பிரித்தே அடைக்கப்பட்டோம். எனது பிள்ளைகளின் கல்வி வாய்ப்பு, மறுக்கப்பட்டதால் அவர்களின் எதிர்காலம் கூடப் பாழடிக்கப்பட்டது. என் பெயரில் தடா வழக்கு பதிவு செய்து சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டதால், இலங்கைக்குத் திரும்பிச் செல்லவும் முடியவில்லை. தற்போது இலண்டனிலும் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டிருப்பதால் அடுத்து எங்கே சென்று வாழ்வது என்பது புரியாமல் எமது எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

## ஜீவன் :

(வயது 42. அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு குடும்பத்தினருடன் இலண்டனில் வசிக்கிறார்.)

1998ம் ஆண்டு மண்டபம் அகதிமுகாமில் குடும்பத்துடன் தங்கியிருந்த என்னை "கியூ" பிரிவு பொலிசார் கைது செய்து வேலூர் சிறப்பு முகாமில் அடைத்தனர். இலங்கை இராணுவத்தின் குண்டு வீச்சினால் ஒருகாலை இழந்த என் மனைவி கைக் குழந்தையுடன் வேறு உதவியின்றி தனித்திருக்க முடியாததால் தன்னையும் என்னுடன் சேர்த்து வைக்குமாறு கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுச்செய்திருந்தார். ஆனாலும் பொலிசார் என்னுடன் சேர்த்து வைப்பதாக என் மனைவியிடம் பொய்யான வாக்குறுதி அளித்து அவரை அழைத்துச் சென்று வேலூர் சிறப்பு முகாமில் தனியாக அடைத்தனர். இதனால் நானும் மனைவியும் எங்களைச் சேர்த்து வைக்குமாறு கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டோம். இறுதியில் என்னை மனைவியுடன் சேர்த்து மேலூர் சிறப்புமுகாமில் அடைத்து வைத்தனர். அங்கே தங்குமிட வசதி, மற்றும் போதிய அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றி மிகவும் கஷ்டப்பட்டோம்.

## ராஜன் :

(TELA இயக்கத்தின் தலைவராக இருந்தவர். தற்போது இலண்டனில் அகதி அந்தஸ்து பெற்றுள்ளார்.)



1987இல் நான் இந்தியாவில் தங்கியிருந்த போது என்னையும் என் நண்பரையும் பொலிஸ்காரர் ஒருவர் இன்ஸ்பெக்டர் அழைப்பதாகக் கூட்டிச் சென்றார். அங்கு எம்மைக் கைது செய்து மதுரைச் சிறையில் அடைத்தனர். சிறைச்சாலைக்குச் சென்றபின்னர் தான் எங்கள் மீது ராஜீவ்காந்தியைக் கொலை செய்யத் திட்டமிட்டதாக வெடிகுண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதை அறிந்தோம்.

இதிலிருந்து தமிழ்நாடு பொலிஸ் பொய் வழக்குப் பதிவு செய்வதில் பெரும் கில்லாடிகள் என்பதை உணர்ந்து கொண்டேன். என்னைப் பொறுத்தவரையில் சிறப்பு முகாம்கள் யாவும் உடனடியாக மூடப்பட வேண்டும். அதில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இந்நிலை ஏற்பட அனைவரும் ஏகோபித்த குரல் எழுப்ப வேண்டும்.

## மதன்தேவா :

(வயது 40. TELE இயக்கத்தின் தலைவராக செயற்பட்டவர். தற்போது இலண்டனில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்)

www.tamilarangam.net





நான் இலங்கையில் இருந்த போது இச்சிறப்பு முகாம்கள் பற்றியும் அதன் கொடுமைகள் பற்றியும் அறிந்திருந்தேன். சட்டவிரோதமாக நடத்தப்படும் இந்த முகாம்கள் யாவும் உடனடியாக மூடப்படல் வேண்டும். அங்கு பொய் வழக்குகள் போடப்பட்டு அநியாயமாக அடைத்து வைக்கப்பட்டு இருக்கும் அகதிகள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்படல் வேண்டும். இந்தியாவில் ஈழத் தமிழர்கள் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். இந்நிலை ஏற்பட அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும்.

## தோழர் வேலு :

(வயது 40. தமிழ்நாட்டைச்சேர்ந்த நக்சலைட் தோழர். தடாவழக்கில் கைது செய்யப்பட்டு 4 வருடங்கள் சிறை வைக்கப்பட்டவர். தற்போது அகதி அந்தஸ்து கிடைக்கப்பெற்று இலண்டனில் வசிக்கிறார்.)



நான் தமிழகத்தில் அரசியல் ரீதியாக ஈழப்போராளி அமைப்புகளுடனும் ஈழத்தமிழ் மக்களுடனும் பழகி வந்துள்ளேன். சிறையில் இருந்த காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள மார்க்சிய லெனினிய அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்ட தோழர் பாலச்சந்திரன் அவர்களையும் சந்திக்க நேர்ந்தது. சிறப்பு முகாம் பெயரில் மற்றொரு (Sub Jail) கிளைச் சிறையில் அடைக்கப் பட்ட பாலச்சந்திரன் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட போது அவரது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படு வதைக் கண்டித்து எமது முற்போக்கு இளைஞர் அணி RYL சிறப்புமுகாம் கொடுமைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது. முகாம் கொடுமைகள் குறித்து பாலச்சந்திரன் எழுதிய கட்டுரைகளை எமது "முன்னோடி" இதழில் வெளியிட்டோம்.

எங்கள் மக்கள் போராட்டக் கட்சியானது சிறப்பு முகாம் என்னும் பெயரில் கிளைச்சிறைகளிலும், மத்திய சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டு உள்ள போராளிகளையும் அப்பாவி மக்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் இந்தியாவில் ஈழத்தமிழ் மக்கள் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் போராடி வந்துள்ளது.

இந்திய அரசும் தமிழக அரசும் இம்முகாம்களில் உள்ள ஈழத்தமிழர்களை மிகவும் கொடுமைப்படுத்தி வருவதை இந்திய மனித உரிமை ஆணையத்திடமும் ஐ.நா அமைப்புகளிடமும் நீதிமன்றங்களிலும் ஏற்கெனவே முறையிட்டு எவ்வித பயனும் இதுவரை இல்லை. இந்த அமைப்புக்கள் அரச ஏஜென்டுகளாகச் செயற்பட்டு வருகின்றனர். தமிழக அரசியல் கட்சிகள் அயோக்கியத்தனமான அரசியல் விளையாட்டுகளுக்கு இந்த முகாம்களில் வாடும் அப்பாவி மக்களை பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருகின்றன. இதைத் தொடர்ந்து கண்டிப்பதுடன் இதனை எதிர்த்துப் போராட ஒட்டுமொத்த உழைக்கும் மக்களும் குரல் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

## பாலேந்திரன் :



(தமிழகத்தில் நக்சலைட் அமைப்புடன் சேர்ந்து அரசியல் பணிகளை மேற்கொண்ட ஈழத் தமிழர். இதனால் கைது செய்யப் பட்டு சிறை வைக்கப்பட்டார். தற்பொழுது இலண்டனில் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்.)

தமிழ் நாட்டில் மார்க்சிய லெனினிய கட்சியுடன் அரசியல் ரீதியான உறவை வைத்துக் கொண்டதனால் பொய் வழக்கில் சிறையில் இடப்பட்டேன். இதனால் தமிழ்நாடு பொலிஸாரினதும், மற்றும் சிறைச்சாலை களினதும் கொடுமைகளை அனுபவரீதியாக அறிந்து கொண்டேன். என்னைப் பொறுத்தவரையில் அதிகார வர்க்கத்தின் ஏவல் காவலர்களின் கட்டளைக்கு உட்பட்டுப் போதல், லஞ்சம் பெற்றுக்கொள்ளுதல் இவை இரண்டுக்கும் எடுபடாத ஈழத் தமிழர்களை சிறப்பு(?) முகாம்களில் அடைப்பது வழமையான நடை முறையாகி உள்ளது. மற்றும் சில முகாம்களில் திட்டமிட்டே சீரழிவை காவல்துறை ஏற்படுத்தியுள்ளது.

முகாம் கொடுமைகளுக்கு எதிராக நடக்கும் போராட் டங்களை கொச்சைப்படுத்துவதும், மக்களிடையே விடுதலைப் போராளிகளையும் ஈழப் போராட்டத்தையும் பற்றிய தவறான தகவல்களைப் பரப்பி, போராட்டத்தை அவமதிப்பதும் வெற்றிகரமாக இவர்களால் மேற்கொள் ளப்படுகின்றது. முகாம்களிலுள்ள பலவீனமானவர்களை தங்களது உளவுத்துறைக்கு ஏதுவான பணிகளில் ஈடுபடுத்துவதுமான காவல்துறையின் செயற்பாடும் தொடர்கிறது. இத்தகைய முகாம்கள் தொடர்ந்து நீடிப்பது இந் நூற்றாண்டின் மிகப்பெரும் மனித உரிமை மீறலாகக் கருதப்பட வேண்டும். இம்முகாம்களை மூட அனைவரும் ஒட்டுமொத்தமாகக் குரல் எழுப்ப வேண்டியது அவசியமாகும்.

சிறப்புமுகாமில் வைக்கப்பட்டிருப்பவர்கள் யாவரும் உடனே விடுதலைசெய்யப்படவேண்டும் என்பதும், சிறப்புமுகாம்கள் யாவும் முற்றாக மூடப்படல் வேண்டும் என்பதுமே அனைவரினதும் ஒருமித்த கருத்தாகும். ❑


www.tamilarangam.net

சிறுவர் தேசம்

THESAM

SIRUVAR 03

January 04 / March 04



## MY TAMIL SCHOOL

My name is Tanya Gayathiri Constantine. I am seven years old. My birthday is on the 22nd April. I am studying Year 3 at the Mount School in Mill Hill. I also attend Sunday dance class at the London Tamil Centre in Wembley.

I like to wear my Punjabi dress and go the dancing class. My dance teachers name is Miss Krishna. She is a very kind and a good teacher. There are about 15 children in our class. Our head masters name is Dr Nithththyananthan.



மேடையில் இலண்டன் தமிழ் மையத்தின் மாணவ, மாணவிகள்

Every April we have our annual cultural programme at the Logan Hall in London. I am looking forward to participate on this event. - *Tanya Gayathiri Constantine*

♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦ ★ ♦




தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் பாரதி தமிழ் பள்ளியின் தேம்ஸ் சிறுவர் மலர் மிகவும் சிறப்பாக வெளிவந்து உள்ளது. உயர்ந்த மனிதர்களான காந்தி, அன்னை தெரேசா, கார்ல் மார்க்ஸ், வள்ளுவர் பற்றிய குறிப்புகள் மிக நன்று. கவிதைகளும், தகவல்களும் இலங்கைக் குறிப்பும் நன்று. சில ஆக்கங்கள் இலகு நடையில் அமைந்தால் சிறாருக்கு இன்னும் ஆர்வத்தைத் தூண்டும். விஜி என்ற சிறுமியின் கவிதை மட்டும் பெயருடன் வந்து உள்ளது. எல்லோரது பெயர்களும் இருந்தால் அவர்களுக்கு ஊக்கம் அதிகமாகும். தேம்ஸ் சிறுவர் மலர் தேம்ஸ் நதி போல் வற்றாமல் ஓடி அழகு சேர்க்க சிறுவர் தேசத்தின் வாழ்த்துக்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



V Nelson



# CULTURE :

Conflict or Compliment?

Culture is the totality of socially transmitted behavior patterns, arts, beliefs, institutions, and all other products of human work and thought. It is the predominating attitudes and behavior that characterize the functioning of a group or organization. Cultures can be inherited from a person's roots or can be adopted from a society they live in. There are many different cultures at present across the world. Sometimes, all these various cultures exist together in multi-cultural societies. In a multi-cultural society the co-existence of an inherited culture and adopted culture creates a situation where either, the cultures result in conflict or they conspire and compliment each other. However, in most cases the consequence is conflict and the cultures do not compliment each other.

On a global perspective, the contrast between inherited culture and adopted culture surfaces the conflict. For example, a person with an inherited Asian culture and an adopted English culture, might find it hard to accept some of the English beliefs. The contrasts of my two cultures have caused me problems. A vital component of culture is religion. Therefore, the person might feel that some of the English beleifs are wrong in the perspective of his inherited religious beliefs. For example, Muslim Asians are not allowed to drink alcohol according to their religion, however it is a popular behaviour pattern of the English culture to drink alcohol, so this is a major conflict. Also, I am a Hindu Asian and according to my religion I don't celebrate Christmas. However in England, as well as being a religious festival, to celebrate Christmas also is like a common behaviour pattern. Therefore because majority of the society celebrates Christmas, I have adapted and adopted, and now I celebrate Christmas. Intially this caused a conflict between my inherited religious cultural beliefs and my adopted religious cultural beliefs. But still there are many Hindu Asians who have not adapted to Christmas. The concepts of marriage, mix marriage, sex before marriage, gender roles, parent and children interaction, behaviour and strong moral beliefs also contrast between the Asian culture and English culture, this leads to conflict.

Focusing on parent and children interaction. In the Asian culture a lot of attention is paid on respect, and the construction of families is considerabley strict. Whereas the English culture, presents a more relaxed family environment and doesn't pay as much attention on respect. I see this as a cause for a problem. For someone like me who has been born into an Asian culture and who has adopted a English culture, it raises a confusion of how to interact with parents and other members of the family. It establishes the complexity of whether to approach the parent and child interaction according to the English culture or Asian culture. When approached according to the English culture it errupts a conflict between the children and

www.tamilarangam.net



the parents who are of an Asian culture. The contrast in opinions due to the different cultures causes family problems. For example, in the English culture it is a common behaviour pattern for youngsters to go out with friends at late nights and drink alcohol, however it is not so common in the Asian culture. This leads to a conflict because parents do not accept that idea because it clashes with their Asian culture, and they do not agree with their children going out at late nights and drinking alcohol a lot. However, if the Child does not go out with his mates due to the preventation of his parents' Asian culture, he his unable to fully adapt to his English culture, and balance both worlds. This introduces a dilemma where the child can not adapt to his English culture and society. This is a problem that can rise due to the contradiction between the parents' inherited culture and the child's adopted culture. This sort of cross-culture dilemma is a daily reality.

Another culture conflict is caused by the contrast in media. Asian media is more prudish compared to the British media. This can be witnessed in Asian cinema, TV programmes, and newspapers. For example, kissing scenes in Asian cinema is avoided, however in British cinema it is common and not so out of the ordinary. This sort of British media might go against someone else's belief causing a culture clash. Also the British media also sometimes portrays things unfairly, this subjects certain communities to discrimination. This was present after the September 11$^{th}$ attack, many Muslims were attacked due to racism and there society was in danger. However, none of these events were broadcasted in proportion to the coverage of September 11$^{th}$. Also at present, the Sri Lankan community is subject to discrimination due to the act of a small number of people from the Sri Lankan community. Due to the act of a minority, the Sri Lankan community are now targeted by the British media unfairly. This introduces culture conflict.

The presence of both inherited culture and adopted culture is the root of many problems. However, it is sometimes inevitable not to adapt and adopt a culture, due to the society you live in. In this case, the adoption of a culture evokes conflict and threatens the inherited culture. It introduces a predicament where the inherited culture is potentially sacrificed. The contrasts between the two cultures, lead to the confusion of which set of beliefs to follow. For example, due to the influence of the adopted culture, a person might begin to forget and lose their inherited culture. This introduces a distance between a person and their roots. I see it as a difficulty to maintain my heritage while living in a contrary. For example, for a Sri Lankan boy who was born into an English culture, by adopting this culture, he has less chance of learning about his roots. By living an English culture, there is the possibilty that he won't learn much about his ancestors, their beleifs and their culture. This leads to the loss of his inherited culture, and creates a distance between him and his parents and family. The reason why adopting a culture is inevitable, is due to the society. For example, in schools, in many subjects they influence your culture. This is done by the subject matter and the way it is taught. In Religious Education, although most religions are taught, the main religion taught is Christianity. Personally, I know more about Christianity than my own religion, Hinduism. This makes it a complication not to adapt to the culture we learn about in school.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



There is a degree of difficulty to settle into the school environment unless you accept the English culture and adapt to it. Not just in the school environment, but also in your community, there is a problem of settling in. By not accepting the English Culture this could lead to cuture clashes. Some forms of this culture clash might be as violent as full blown racism. Racism is an instrument of discrimination that can cause mental and physical damage. This can be the result when members of a different culture cannot understand and accept your culture and race.

The co-existence of an inherited and adopted culture means having to satisfy the needs of both cultures. But this is not always possibly because of the contradictions between the two cultures. In my case, I inherit an Asian culture but have adopted and English culture. In order to fit into the society without problems, I am in a predicament where I have to in a way have to please the English culture. However, I also need to please my Asian culture in order to be accepted by my parents and family. This leads to a conflict. Some of the things I do to please the English culture and to be accepted by my peers and society are sometimes seen as wrong and unacceptable by my roots, parents and family. Also when I do things to please my Asian culture, it creates a distance between me and the society I live in. Therefore it is very hard to satisfy and be accepted by both cultures and to balance the both.

From an individual pespective, cross-culture dilemmas are a daily reality. These dilemmas are in one way or another need to be solved in order to live life. In my case, I haven't found a solution for the conflict between my two cultures. However, I have adapted and learnt to live with both of my cultures and with the conflict they cause. In order to proceed with my life, I have learnt to balance the two worlds, even though they don't understand each other.



இலண்டனில் சில தமிழர்கள் தமிழில் பேசுவது கேவலம், தமிழ் படிப்பது வீண் வேலை என நினைக்கின்றனர். தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது என்பதை பெருமையாகவும் எண்ணுகின்றனர். ஆனால் இலங்கைத் தமிழரான ரவி ஆபிரிக்கப் பெண்ணை மணந்திருந்தும் தன் பிள்ளைகளுக்கு அருள்வாணி (வயது 11), அபிராவாணி (வயது 8), கோகுலன் (வயது 3) என அழகுதமிழில் பெயரிட்டு தமிழ் பேச, படிக்க பழக்கி வருகிறார். ஆனால் ரவி போன்றவர்களின் முயற்சிகள் "தமிழ் இனி மெல்லச் சாகாது" என்ற நம்பிக்கை கொள்ள வைக்கின்றது. எனவே நிச்சயம் ரவி குடும்பத்தினர் பெருமை கொள்ள முடியும்.

சிறுவர் தேசம் 2ல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்:
1) 166 years (1337-1453) 2) Ecuador 3) Sheep and horses 4) November (the Russian calendar is 13 days behind ours) 5) Squirrel fur 6) Dogs (the Latin name is insularia canaria) 7) Albert (queen Victoria decreed that no future king should ever be called Albert.) 8) Crimson 9) New Zealand 10) Orange

www.tamilarangam.net



**தாயக மக்களுக்கு தனிப்பட்ட முறையிலும் பொது நிறுவனங்களுக்கு ஊடாகவும் தமது தொப்புள் கொடி உறவுகளுக்கு புலம்பெயர்ந்த சமூகம் தன் ஆதரவுக்கரத்தை நீட்டி வருவதை பத்திரிகைச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. தாயகத்திற்கு உதவி வழங்கும் ஆலயங்களுக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் மக்கள் வாரி வழங்குகின்றனர் என்பது கணக்கு விபரங்களில் தெரிகிறது. பல்வேறு வகைகளிலும் சேரும் இந்த நிதி முழுமையான பலனைப் பெறும் வகையில் பயன்படுத்தப்படுகிறதா? ( Dr N சிவராஜா 24 ஆகஸ்ட் 03ல் தேசத்திற்கு வழங்கிய கட்டுரை)**

## வடக்கு கிழக்கின் சுகாதார சீரழிவிற்கு

# யார் பொறுப்பு?



**Dr N சிவராஜா**
விரிவுரையாளர், சமூகமருத்துவம்
யாழ் பல்கலைக்கழகம்
ஆலோசகர்
உலக சுகாதார ஸ்தாபனம்

ஊரில் மருத்துவர்கள் இல்லை. வெளிநாட்டில் இருந்து வாருங்கள் என்று இங்கு வருபவர்கள் கேட்பது இலகுவான கோரிக்கை தான். ஆனால் வெளிநாட்டில் அதற்கு உடன்படமாட்டார்கள் என்பது யதார்த்தம். ஆனால் விசேட நிபுணர்களை வரவழைத்து குறிப்பிட்ட சிகிச்சை நிலையத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு பணியாற்ற வகைசெய்ய முடியும். வெளிநாட்டு மருத்துவ உதவிகளை வடக்கு கிழக்குடன் இணைப்பதற்கான ஒரு அமைப்பின் தேவை இங்கு வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது. இது இலண்டனிலோ கொழும்பிலோ யாழ்ப்பாணத்திலோ கூட இருக்கலாம்.

வெளிநாட்டில் உள்ள மருத்துவர் வட கிழக்கிற்கு வந்து சேவை செய்வதில் பல நிர்வாகச் சிக்கல்கள் உண்டு. இவற்றுக்கூடாக ஒருவர் வந்து சேவையை ஆரம்பிக்கப் பல மாதங்கள் எடுக்கும். ஏதோ அங்கு வேலை இல்லாமல் இவர் இங்கு வர விண்ணப்பிக்கிறார் என்பது போல்தான் அரசின் நடவடிக்கைகள் தோன்றும். மருத்துவ உதவிகளை இணைக்கும் அமைப்பு ஒன்று இருந்தால் இவ்வாறான இணைப்பு நடவடிக்கைகளை பயனுள்ள வகையில் நேரவிரயம் இன்றிச் செய்யலாம்.

எங்களுக்கு புலம்பெயர்ந்த மக்களிடம் இருந்து பெரிய உதவிகள் அவசியம் இல்லை. இருக்கின்ற வளங்களையே சரியான முறையில் பயன்படுத்தலாம். மருத்துவர்கள் வேண்டும் என்று குரல் எழுப்பப்படுகிறது.

ஆனால் இருக்கின்ற மருத்துவர்கள் மருத்துவ மனைகளுக்கு சரியாகப் பகிரப்பட வில்லை என்ற உண்மை உணரப்படவில்லை. நிர்வாக ரீதியில் சில தடைகள் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டாலும் கூட நாங்களும் இவற்றை மீறி மக்களின் நன்மைக்காக எதையும் செய்ய எத்தனிக்கவில்லை.

யாழ் போதனா மருத்துவமனைக்குத் தேவையான வைத்திய நிபுணர்களில் 90 வீதம் அங்கு கடமையில் உள்ளனர். சாதாரண வைத்தியர்களைப் பொறுத்த வரை தேவைக்கு அதிகமாகவே உள்ளனர். மருத்துவ அலுவலர்கள் 120 சதவீதம் உள்ளனர். ஆனால் நோயாளர்கள் கட்டிலுக்கு கீழும் நிலத்திலும் நிர்வகிக்க முடியாத அளவிற்கு உள்ளனர். இதற்கு காரணம் மருத்துவ ஆளணி சீராக பகிரப்படாததே.

வைத்தியர்களை எடுத்துக் கொண்டால் யாழ் மருத்துவமனையில் 90பேர் இருக்க வேண்டிய இடத்தில் 130பேர் உள்ளனர். 40பேர் இருக்க வேண்டிய பருத்தித் துறை மருத்துவமனையில் ஒருவர் தான் இருக்கிறார். முழு யாழ்ப்பாண மாவட்டத்திலும் இந்த சீரற்ற பகிர்வு நிலைமையே காணப்படுகிறது. சங்கானை, சுழிபுரம், காரைநகர், ஊர்காவற்துறை போன்ற இடங்களை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு மருத்துவர் உள்ளனர். ஊர்காவற்துறையில் மருத்துவர் எவரும் இல்லை.

இம்மருத்துவமனைகளுக்கு போதிய மருத்துவர்கள் அனுப்பப்பட்டால் யாழ் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறையும். யாழ் மருத்துவமனையின் சுமை குறையும்.

அண்மையில் வடக்கு கிழக்கு சுகாதார சேவைகளுக்கான திட்டம் ஒன்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் வேண்டுகோளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டது. பொதுவான நோய்களுக்கு அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளிலேயே சிகிச்சை வழங்கவும் யாழ் போதனா மருத்துவமனையை விசேட நிபுணத்துவ சிகிச்சைகளுக்கு மட்டுமே மையப்படுத்தி

www.tamilarangam.net



சேவை வழங்க இத்திட்டம் பரிந்துரை செய்திருந்தது. யாழ் நகருக்கு அண்மையிலேயே பல்கலைக்கழக மருத்துவபீடமும் இருப்பதால் இதய சிகிச்சை, நுரையீரல் சிகிச்சை, கண் சிகிச்சை போன்ற விசேட சத்திர சிகிச்சைகளை யாழ் மருத்துவமனையில் மேற்கொள்ள முடியும்.

தீவகப் பகுதியில் உள்ள வேலணை மருத்துவ மனைக்கு அண்மையில் சென்ற போது 5 கட்டில்களில் மூன்றிற்கு கால் முறிந்துவிட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அதே மருத்துவமனையில் இன்னுமொரு கட்டிடத்தில் 55 புத்தம் புதிய கட்டில்கள் அடுக்கப்பட்டு இருந்தது. அப்புதிய கட்டில்கள் புங்குடுதீவு மருத்துவமனைக்கு வந்ததாகவும் அங்கு இடமில்லாததால் வேலணையில் அடுக்கி வைக்கப்பட்டு இருந்ததாகவும் கூறப்பட்டது.

புங்குடுதீவு மருத்துவமனையில் மருத்துவர் இல்லை. கட்டிடங்கள் இடிந்துவிட்டது. அங்கு அவ்வளவு மக்கள் இல்லை. புங்குடுதீவு மருத்துவமனையை மீளக் கட்டுவார்களோ தெரியாது. புங்குடுதீவில் மருத்துவமனையை கட்டி முடித்து இக்கட்டில்களைக் கொண்டு செல்ல எத்தனை ஆண்டுகள் எடுக்கும்? இந்த விடயத்தில் நாங்கள் அரசை மட்டும் பிழை சொல்ல முடியாது. எம்மவர்களிலும் தவறு உள்ளது.

யாழ் மருத்துவ அதிகாரிக்கு இவ்வாறான விடயங்களை கையாள அதிகாரம் இருக்கிறது. எம்மவர்களுக்கு சற்று ஆர்வம் ஊட்ட வேண்டும்.

புற்றுநோயை எடுத்துக் கொண்டால் இப்பொழுது லீனியர் அக்ஸிலேட்டர் (Linear Accellerator) ஒன்றுடன் கூடிய சிகிச்சை நிலையம் ஒன்று வேண்டும் என்று மருத்துவ வட்டாரத்திலிருந்து கேட்கப்படுகிறது. இலங்கையில் 3 - 4 கோபால்ற் யுனிட்கள் இருக்கிறன. ஆனால் ஒரு லீனியர் அக்ஸிலேட்டர் மையம் தான் உள்ளது. லீனியர் அக்ஸிலேட்டரை பதிக்க புதிய கட்டிடம் தேவை. அதனை பயன்படுத்த ஒரு நிபுணர் தேவை. இலங்கை முழுவதற்கும் அவ்வாறான ஒரு நிபுணர் மட்டும் மகரகமையில் உள்ளார். வெளிநாட்டில் இருந்து நிபுணர் ஒருவர் வரவழைக்கப்பட்டாலேயே அதனை இயக்க முடியும்.

லீனியர் அக்ஸிலே ட ர் மிகவும் நவீனமானதொரு தொழில் நுட்பம். அதனால் பல நன்மைகள் கிட்டும் என்பது உண்மை. ஆனால் லீனியர் அக்ஸிலேட்டர், புதிய கட்டிடம், ஒரு நிபுணர் இவை எல்லாம் வடபகுதிக்கு வந்து சேரும் நாள் என்று வருமோ தெரியாது. அப்படி வந்து சேரும் பாக்கியம் ஒரு வேளை கிட்டினால் அந்தவேளையில் இங்கு எத்தனையோ ஆயிரம் புற்றுநோய் நோயாளிகள் இறந்து போய்விட்டிருப்பார்கள்.

ஒவ்வொருவரும் லீனியர் அக்ஸிலேட்டர் கொண்டுவர வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர வட கிழக்கில் உள்ள புற்று நோயாளிகளைப் பற்றி, அவர்களின் அடிப்படை தேவைகளைப் பற்றி, அத்தியாவசிய பராமரிப்புப் பற்றிக் கவனிப்பதாகத் தெரியவில்லை. உடனடியாகத் தேவையானது அடிப்படை புற்றுநோய் சிகிச்சை மையம் (Cobalt Unit) ஒன்றே. தேவைகளின் முக்கியத்துவத்தை வரிசைப்படுத்தி தீர்மானம் எடுப்பதற்கான அலகு ஒன்று எமக்கு மிக அவசியம்.

முழுமையாகச் சிந்திக்கின்ற எண்ணம் எமது நிர்வாகிகளிடம் குறைவு. கண் சத்திர சிகிச்சை நிபுணரை எடுத்தால் அவர் கண் சிகிச்சை நிலையத்தை விருத்தி செய்யத்தான் பார்ப்பார். உதாரணமாக தமது சிகிச்சைப் பிரிவிற்கு ஒரு நவீன உபகரணத்தை கேட்பார்கள். அதனால் எத்தனை பேர் பயனடைவார்கள்? அதற்குப் பதிலாக மருத்துவமனையைப் பற்றி முழுமையாகச் சிந்தித்து அதனை வேறுவழியில் முதலிட்டால் பலர் பயனடைவார்கள் என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை.

மற்றுமொரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிடலாம். யாழ் பண்ணைப் பகுதியில் பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமான காணி சுகாதார அமைச்சிற்கு அன்பளிக்கப் பட்டு இருந்தது. அதில் மார்புச் சிகிச்சை நிலையம் ஒன்று இயங்கி வந்தது. ஆனால் பின்னர் இது கவனிக் காமல் விடப்பட்டது. அங்கு கியுடெக் என்ற கிறிஸ்தவ அமைப்பு கரையூர்ப் பகுதி மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டி தேவாலயம் ஒன்றும் கட்டிக் கொடுத்தது. பண்ணை மருத்துவ மனையை திருப்பிக் கட்டுவதற்கு பார்க்கப் போகும் போது தான் அங்கு வீடுகளும் தேவாலயமும் கட்டப்பட்டது தெரியவந்தது. இதனை ஒரு அரசசார்பற்ற நிறுவனம் செய்துள்ளது. இப்பொழுது அரசாங்கமும் கியுடெக்கும் சண்டை பிடிக்கவில்லை. யாழ் சுகாதாரப் பிரிவும் மக்களும் தான் சண்டை பிடிக்கிறார்கள்.

இதேபோல் ஆத்தி சூடிவீதியில் இருந்த பிள்ளையார் கோவிலுக்கு மண்டபம் எல்லாம் கட்டப்பட்டு பிரதான வீதிவரை வந்துவிட்டது. இனி கோவிலை இடித்துத்தான் புகையிரதம் ஓட வேண்டும். பலாலி வீதி, காங்கேசன் துறை வீதியில் உள்ள கட்டிடங்கள் எல்லாம் திருப்பிக் கட்டப்பட்டு பாதை ஒடுங்கிவிட்டது. முக்கிய அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பகுதிகளை எல்லாம் அடையாளம் குறித்து அங்கு கட்டடங்களைத் திருப்பிக் கட்ட அனுமதி வழங்கி இருக்கக்கூடாது என்று இப்போது கருத்துக் கூறப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் அப்படிச் செய்யப்படவில்லை.

மேலும் யாழ் மருத்துவ பீட மாணவர்கள் தமது படிப்பு முடிந்ததும் பொருளாதாரரீதியில் வளம் பெற யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி விடுகிறார்கள்.

www.tamilarangam.net



இது அன்று முதல் இன்று வரை நடைபெறுகிறது. அது தவறு என்றும் சொல்ல முடியாது. ஆனால் இந்த மாணவர்கள் தமது படிப்பு முடிந்ததும் குறைந்தது இரு ஆண்டுகள் என்றாலும் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் 70-80 மருத்துவர்கள் யாழ்ப்பாண மருத்துவபீடத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளை உள்ளடக்கிய வன்னியில் ஆறுபேர் மட்டுமே மருத்துவர்களாக வேலை செய்கிறார்கள். முல்லைத்தீவு மருத்துவமனையில் ஒரு மருத்துவரும் இல்லை. இம்மருத்துவமனைக்குப் பொறுப்பாக புலிகளின் உறுப்பினரே உள்ளார். புதுக்குடியிருப்பில் இருவரும் கிளிநொச்சியில் மருத்துவர் ஒருவரும் உள்ளனர். முழங்காவில்லில் இருவர் உள்ளனர். இவர்கள் அங்கு சிறந்த சேவையை வழங்குகின்றனர்.

நாங்கள் மிகவும் அசமந்தப் போக்கு உடையவர் களாக ஆகிவிட்டோம். அதிகம் பேர் தேவையில்லை 5-10 ஆர்வமுடையவர்கள் இருந்தால் போதும் இவற்றை எளிதில் சீர்படுத்தலாம். 20 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்தால் நாங்கள் இரண்டாம் பட்ச நிலையில் அல்லது கட்டுப்பாட்டுக்குள் வாழப்பழகிவிட்டோம். முதன்மை வகிக்க தலைமைத்துவத்தை எடுக்க தயாராக இல்லை. ❑

## இயேசு பிரான்களா ?

வத்தியூர் மைக்கல்

நாங்களும்
எத்தனை தடவைகள்
சிலுவை சுமப்பது?
வெலிக்கடையில் இருந்து
பூசா வரை...

யூதர்களின் சவுக்கடி போதும்
மூன்று நாட்கள் வேண்டாம்
முன்னூறு நாட்கள் கழித்தாவது
நாங்களும் ...
உயிர்த்தெழ வேண்டும்.

புலம் பெயர்ந்த, இலங்கை, இந்திய தமிழ் படைப்புகளின் களஞ்சியம்

அறிவாலயம்
புத்தகசாலை - பாரிஸ்

Paris Arivalayam
Paperterie - Librairie

புதிய தேடலுக்கான நூல்கள்
சஞ்சிகை வெளியீடுகள்
மற்றும்
பாடசாலை - அலுவலக உபகரணங்கள்
தொலைபேசி அட்டைகள்
அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

7, rue Perdonnet
75010 Paris
France

Tel : 00 331 (0) 1 44 72 03 04
Fax : 00331 (0) 1 44 72 03 35

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஆரோக்கியமான தமிழ் சமூகம் உருவாக

மீனாள் நித்தியானந்தன்
சமூக மருத்துவ ஆய்வாளர்

"தாயும் சேயும்" நூலின் முன்னுரையில் Dr. M.K. முருகானந்தன், 1855 இலேயே தமிழில் மருத்துவ போதனையை இலங்கையில் மேற்கொண்ட டாக்டர் கிரீன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 150 . வருடங்களுக்கு முன்பே தமிழில் மருத்துவ நூல்களை எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது வியப்பாக இருந்தது.

ஆனால், கடந்த 70 வருடங்களில் ஆக 5 நூல்கள் மட்டுமே இலங்கையில் மருத்துவ நூல்களாக வெளிவந்துள்ளன என்ற விபரமும் ஆச்சரியமாக உள்ளது. பேராசிரியர் சின்னத்தம்பி, Dr.இராசரத்தினம், Dr.நந்தி, Dr.தயா சோமசுந்தரம், Dr.M.K.முருகானந்தம் ஆகிய ஐவரின் நூல்கள் தான் இலங்கையில் தமிழ் மருத்துவ நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

மருத்துவ நிபுணர்கள் நிறைந்த சமூகமாக யாழ்ப்பாணத்தை பெருமையோடு பேசுபவர்களை நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் சர்வதேசப் புகழ் மிகுந்தவர்களாகவும் திகழ்ந்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் இந்த மருத்துவ நிபுணத்துவத்தால் தமிழுக்கு, தமிழ் மக்களுக்கு மருத்துவ நூல்கள் எதுவுமே ஆக்கப்படவில்லை என்ற உண்மை கசப்பானதாகும். தொழில்பார்த்து, பணம் சம்பாதிக்க முடிகின்ற துறையாக மட்டுமே மருத்துவத் துறையை பார்த்து வந்திருக்கிறார்கள் என்றால் அதில் பெருமைப்பட்டுக்கொள்ள எதுவுமேயில்லை.

தமிழில் மருத்துவ எழுத்துகளுக்கு, மருத்துவ நூல்களுக்கு நிறையத்தேவை இருக்கின்றது. சுகாதாரக் கல்வி தமிழ் மக்கள் மத்தியில் பரவவும் வேரூன்றவும் தமிழில் மருத்துவ நூல்கள் நிறையவே வெளிவர வேண்டும். சுகாதாரம் நிறைந்த ஆரோக்கியமான சமூகம் உருவாவது அச்சமூகத்தின் சுகாதார அறிவில் தான் தங்கி உள்ளது.

சுகாதார அபிவிருத்தியானது அந்த சமூகத்தின் சுகாதாரக் கலாச்சாரத்தைச் சார்ந்தே அமைகிறது. தங்களின் உடல் நலம் பற்றிய, நோய்கள் பற்றிய குறைந்தபட்ச விபரங்கள்கூடத் தெரியாத நிலையிலேயே வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருவதை நாம் நமது நடைமுறை அனுபவத்தில் காண்கிறோம். சாதாரண மக்களிடம் மட்டுமல்ல, படித்தவர்களின் மத்தியில் கூட சுகாதார நலன் பற்றிய அறிவ வெறுமையாக இருப்பதை நாம் காணலாம்.

"உங்கள் உடல், உளம், பாலியல் நலம் பற்றி' என்ற ராஜேஸ்வரியின் இரண்டாவது நூல் தற்போது வெளிவந்திருக்கிறது. ராஜேஸ்வரியின் முயற்சியை நாம் பாராட்டியேயாக வேண்டும்.

உடம்பில் ஏதாவது நோய் அல்லது சுகவீனம் என்றால் மருத்துவமனைக்குச் சென்று ஒரு மருத்துவநிபுணரிடம் நம்மை ஒப்படைத்துவிடுவதோடு நாங்கள் திருப்தி அடைந்து விடுகிறோம். என்னதான் உயர்ந்த மருத்துவ நிபுணராயினும், எவ்வளவு உயர் வசதிகளை ஒரு மருத்துவமனை கொண்டிருந்தாலும் உடல் நம்முடையது என்ற உணர்வு நம்மிடம் எப்பொழுதும் நிறைந்திருக்கவேண்டும். தன்னுடைய உடல்நோய், தனது சுகவீனம், பலவீனம் பற்றிய உணர்வும் ஞானமும் ஒரு நோயாளிக்கு மிக அவசியம்.

அமெரிக்க மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சையில், மருத்துவ நிபுணர்களின் தவறுகள் காரணமாக ஒவ்வோராண்டும் 45,000 பேருக்கும் ஒரு லட்சம் பேருக்கும் இடையில் நோயாளிகள் மரணம் அடைகிறார்கள் என மருத்துவ ஆய்வு தெரிவிக்கிறது. "தவறுசெய்வது மனித இயல்பு" என்ற தலைப்பில் அவர்கள் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள். நோயாளிகளின் இம்மரணங்கள் சிறந்த மருத்துவ நிபுணர்களின் முன்னிலையிலேயே நடந்திருக்கின்றன.

வைத்தியசாலைகளில் மருத்துவர்களின் கவனக் குறைவாலும் தவறான சிகிச்சையாலும் மோசமான நிலைக்கு இட்டுச்செல்லப்படும் நோயாளர்கள் பற்றி நாம் நிறைய அறிந்திருக்கிறோம். எத்தகைய மருத்துவ நுட்பமானாலும், அது நமது உடல்சார்ந்தது என்பதால் நமது நோயைப் பற்றி நாம் பூரண அறிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். சில நோயாளிகள் தமக்குரிய நோயைப் பொறுத்தவரை அந்நோய்க்கான மருத்துவ நிபுணர்களைவிட ஆழமான அறிவு கொண்டவர்களாக இருப்பதையும் நாம் பார்க்கலாம்.

இவ்வாறு நமது சுகாதாரநிலை பற்றிய விழிப்பும் ஆழமான விபரஞானமும் பெறுவதற்கு தமிழில் மருத்துவநூல்கள் நிறைய வெளிவர வேண்டும். இன்று

www.tamilarangam.net



பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் சிறந்த மருத்துவ நிபுணர்களைக்கொண்டு மருத்துவ விளக்கங்கள் வழங்கி வருகின்றன.

தீபம் தொலைக்காட்சியில் சிலகாலத்திற்கு முன் ஒரு மருத்துவநிபணரின் பேட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் அப்பேட்டியின் போது ஆங்கில மருத்துவப் பதங்களை அடிக்கடி பிரயோகித்துக் கொண்டிருந்தார். அப்பதங்கள் மருத்துவத்துறையில் ஏதாவது படித்திருப்பவர்களுக்கு அல்லாமல் சாதாரண மக்களுக்கு ஒரு அர்த்தத்தையும் கொடுக்காது. கேட்பவர்களுக்கு அல்லது வாசிப்பவர்களுக்கு மனதில் பதியுமாறு தெளிவாகவும் எளிமையாகவும் மருத்துவ விடயங்கள் கூறப்பட வேண்டும்.

"உங்கள் உடல், உளம், பாலியல் நலம் பற்றி" என்ற இந்த நூலின் தலைப்பு மிக நீண்டது. 145 பக்கங்கள் கொண்ட இந்நூல் 4 முக்கிய அம்சங்களை விபரிக்கிறது. இருதயநோய், நீரிழிவு, உளவியல் நலம், பாலியல் என 4 மருத்துவத்துறைப் பிரச்சினைகளைப் பற்றி ராஜேஸ்வரி இந்நூலில் எழுதியிருக்கிறார்.



உளவியல் நலம் நமது சமூகத்தில் அவ்வளவாக ஆராயப்படாத துறையாகவே இருக்கிறது. Dr.தயா சோமசுந்தரம், யாழ்ப்பாணத்தின் யுத்த சூழ்நிலையின் பின்னணியில் உளவியல் பாதிப்பினை நன்கு அராய்ந்து "மனவடு" என்ற நூலை ஏற்கெனவே எழுதியிருக்கிறார்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மனநோய் பற்றி மக்கள் மத்தியில் தவறான கணிப்புகளே இன்றும் நிலவிவருகின்றன. மனநலங் குன்றியவர்கள் சமூகத்தில் இருந்து என்றென்றும் ஒதுக்கிவைக்கப்படுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல அவர்களின் சந்ததியினரும் ஓரங்கட்டப்பட்டு விடுகிறார்கள். முதுமையில் வரும் டிமென்சியா (Dementia), அல்ஸைமர் (Alzheimer), பார்க்கின்சன் நோய் (Parkinson Disease) போன்ற பல நோய்களைக் குறித்து இந்த நூல் சிறந்த விபரங்களைத் தருகிறது. எங்கள் ஊர்களில் முதுமை யில் மறதி வந்துவிட்டால் நாங்கள் அவர்களுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதாகவே பட்டம் சூட்டிவிடுவோம். எங்களை வளர்த்து ஆளாக்கிய தெய்வங்களாகிய அவர்கள் தமது நினைவைத் தொலைத்தபின் அவர்களின் பாதுகாப்பு எங்கள் அன்பிலும் ஆதரவிலும் தான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும் என்று ராஜேஸ்வரி சரியாகவே எழுதியிருக்கிறார்.

மன அழுத்தங்கள் பற்றிய பகுதியையும் ராஜேஸ்வரி சிறப்பாகவே எழுதியிருக்கிறார். மனநோய் பற்றி ஆங்கிலேயப் பின்னணியில் எழுந்த நூல்களைக் கொண்டே விபரித்திருக்கிறார். மனநோயைப் புரிந்து கொள்ள மன நோய்க்குட்பட்டவர்களின் சமூக, கலாச்சா ரப் பின்னணியைப் புரிந்துகொள்வது அவசியமாகும்.

சவுதி அரேபியாவில் இளம் அரபுப் பெண்கள் மன அழுத்தப் பிரச்சினைகளுக்கு உள்ளாவதை நான் பார்த்திருக்கிறேன். இந்த அரபுப் பெண்களின் மன அழுத்தத்தைப் புரிந்துகொள்ள இஸ்லாமியப் பாரம்பரியம், இஸ்லாமியத் திருமண உறவுமுறை பற்றி நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்த மனநோய் ஆய்வுகள் தமிழ்மக்கள் மத்தியில் விசேஷமாக மேற்கொள்ளப்படவேண்டும். ஆங்கில நூல்களில் காட்டப்படும் பொதுவான அம்சங்களை அப்படியே நமது மக்களிடம் பிரயோகிக்கமுடியாது.

இருதய நோயின் அறிகுறிகள், இருதய நோய் ஏன் தோன்றுகிறது என்பது பற்றிய சிறந்த விளக்கத்தை இந்நூல் தருகிறது. நீரிழிவு வியாதியும் ஆசிய மக்களிடத்தில் அதிகமாகக் காணப்படும் வியாதியாகும். நோயாளர்கள் மட்டுமல்ல, நோயாளிகளை வைத்துப் பராமரிப்பவர்களுக்கும் இந்த நோயைப் பற்றிய விபரங்கள் தெரிந்து இருக்க வேண்டும். Diabetes Type 1, Type 2 என்ற இரண்டு வகையினங்களையும் நன்கு வேறுபடுத்தி அவசியமான விபரங்கள் தரப்பட்டு உள்ளது. நீரிழிவுக்கான உணவு பற்றிய குறிப்பில் Saturated fat, unsaturated fat பற்றிக் கூடிய முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும் என்று கருதுகின்றேன்.

பாலியல் பற்றிய இறுதி அத்தியாயமும் ஆரோக்கியமான பார்வையில் எழுதப்பட்டு உள்ளது. பாடசாலைகளிலேயே பாலியல் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற குரல் இங்கு வேகம் பெற்றுள்ளது. தமிழில் ஒரு முன்னுதாரணமாக இது அமைகின்றது.

ஆஸ்துமா மிக முக்கியமாகத் தமிழர் மத்தியில் காணப்படும் ஒரு நோய்தான். ஆஸ்த்மா இங்கு லண்டனிலும் வேறு ஐரோப்பிய நாடுகளிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குழந்தைகளைக் கூட மிகமோசமாகப் பாதிக்கும் ஒரு நோயாகும். ஆனால் இந்நோய் பற்றிய தகவல்கள் ஏன் தவிர்க்கப்பட்டது எனத் தெரியவில்லை.

இம்மாதிரியான சுகாதார / மருத்துவ நூல்களை எழுதும்போது, விளக்கப்படங்களுக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். எழுத்தில் விபரிப்பதைவிட படங்களின் வாயிலாக விளக்குவது வாசகர் புரிந்துகொள்ள வசதியானது. சென்னையில் மிகச்சிறந்த மகப் பேற்று மருத்துவ நிபுணரான Dr. ஞானசௌந்தரி அவர்கள் எழுதி உள்ள "மணப்பேறும் மகப்பேறும்" என்ற நூல் மிகவும் அழகான, தெளிவான விளக்கப் படங்கள் கொண்ட தரமான நூலாகும்.

> இந்து ஆலயங்கள் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் கவனம் செலுத்துவது மிக அவசியமான சமூகப் பணியாக அமையும்.

இந்நூலில் 9 விளக்கப்படங்கள் மட்டும் உள்ளது. நிறைந்த விளக்கப் படங்கள் மருத்துவ நூலை சுவையாக வாசிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் துணைபுரியக் கூடியது. வண்ணப் படங்கள் இத்தகைய நூலுக்கு மிகவும் அவசியமாகும். இன்று நவீன Graphics துணையுடன் படங்கள் மிகவும் துல்லியமாக அமைகின்றன. மருத்துவ நூல்களில் எழுத்தாக்கத்திற்கு தரப்படும் முக்கியத்துவம் படங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

இன்று Medicine என்பதிலிருந்து Health Care என்பது பற்றி மருத்துவ உலகம் அக்கறையோடு பேசிவருகிறது. மக்கள் மத்தியில் சுகாதார நலன் பற்றிய அறிவை கட்டி எழுப்புவது என்பதுதான் அது.

கியூபாவின் மருத்துவ வளர்ச்சி இத்தகைய ஆய்வுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது. பாடசாலைச் சிறுவர்கள் தங்கள் பற்களை பல் மருத்துவரிடம் ஒவ்வோராண்டும் காட்ட வேண்டும் என்று லண்டனில் கூடக் கட்டாயமாக்கப்படவில்லை. ஆனால் கியூபாவில் கட்டாயம் ஆக்கப்பட்டு உள்ளது. கியூபாவில் அதிநவீன மருத்துவ நிலையங்களோ, உயர் மருத்துவ ஆராய்ச்சிக்கான வசதிகளோ அதிகம் இல்லை ஆயினும் அவர்களின் சுகாதார அக்கறை பெரிதும்பாராட்டப்படுகிறது.

தமிழ் சமூகத்தின் மத்தியிலும் சுகாதார அக்கறை பரவுவதற்கு இம்மாதிரி மருத்துவ நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும். இந்நூலை வெளியிடுவதில் ருட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஸ்தாபகர் சீவரத்தினம் அவர்களின் உதவி நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியதாகும். இந்து ஆலயங்கள் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் கவனம் செலுத்துவது மிக அவசியமான சமூகப் பணியாக அமையும். ❑


**Langorf Hotel & Apartments**

20 Frognal, Hampstead, London, NW3 6AG

**DO YOU NEED ACCOMODATION IN LONDON ?**

Tastefully Furnished Hotel Bedrooms,
Self Catering Apartments or Flats Suitable for Families or Individuals.
Ten Minutes Away From Oxford Street.

We are pleased to offer 25% discount to any "Thesam" readers wanting accommodation in London.

Tel : 0207 794 4483
E -mail : info@langorfhotel.com
Fax : 0207 435 9055
Web : www.langorfhotel.com

தமிழில் தொடர்புகளுக்கு : 07919 444 994

www.tamilarangam.net



# மகாகவி

என் செல்வராஜா
நூலகவியலாளர்

மகாகவி என்று இலக்கிய உலகில் அறியப்பட்டது. உருத்திரமூர்த்தி என்ற ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடியின் பிறந்த தினம் ஜனவரி 9. 1927ம்ஆண்டு ஜனவரி 9ம் திகதி யாழ் அளவெட்டியில் பிறந்த இவர் தனது பதினாறாவது வயதில் ஈழகேசரியில் பிரசுரமான மின்னல் என்ற கவிதை மூலமாக இலக்கிய உலகில் கால்பதித்தார். தன் கவி வலிமையால் இலக்கிய உலகில் புகழின் உச்சியில் இருந்த வேளை 1971 யூன் 20ல் தனது 44வது வயதில் மாரடைப்பினால் உயிர் நீத்தார்.

ஈழத்தில் மாத்திரமல்லாது தமிழகத்திலும் அந்நாளில் புகழ்ந்து பேசப்பட்டவர் மகாகவி. தமிழுக்குப் புதியதொரு பா வடிவமாகப் பேசப்பட்ட குறும்பாவைத் தந்தவர் இவர். தனிக் கவிதை, காவியம், பா நாடகம், இசைப்பாடல், சிறுவர்பாடல், வில்லுப்பாட்டு, கவியரங்கப் பாடல்கள் எனப் பல பரிமாணங்களிலும் கவிதையைக் கச்சிதமாகக் கையாண்டு வெற்றி பெற்றார்.

திறைசேரி எழுதுவினைஞராக 1945இல் இணைந்து கொழும்பில் சேவையாற்றிப் பின்னர், திருகோணமலை கடற்படை அலுவலகம், யாழ்ப்பாண மாவட்டக் காணி அலுவலகம் ஆகியவற்றில் அலுவலராகப் பணியாற்றினார். பதவியுயர்வுகளால் 1971இல் அரசகரும மொழித் திணைக்களத்தின் உதவி ஆணையாளரானார்.

பின்னாளில் பண்டிதர், மாபாடி, காப்பியாற்றுக் காப்பியனார், பாணன், வாணன், மகாலட்சுமி என்று பல புனைப் பெயர்களில் மறைந்திருந்து ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சியை அடையாளம் காட்டும் படைப்பாளிகளுள் முன்வரிசையில் இடம்பெற்றார்.

கல்லழகி என்ற இவரது காவியம் டிசம்பர் 1959இல் எழுதப்பட்டது. சடங்கு என்ற இவரது காவியம் 1961 இறுதிப்பகுதியில் எழுதப்பட்டடு தினகரனில் வெளிவந்தது. 1967இல் எழுதப்பட்டு 1968ல் ஈழநாடு வார இதழில் வெளிவந்த கந்தப்ப சபதம், சடங்கு என்ற இரு காவியமும், மகாகவியின் இரண்டு காவியங்கள் என்ற பெயரில் 1974ல் சென்னை பாரி நிலையத்தால் வெளியிடப்பட்டது. கலாநிதி சாலை இளந்திரையன் பதிப்பாசிரியராக இருந்து அதனைச் செய்தார். மகாகவியின் மூன்றாவது காவியமான தகனம், 1962இல் கவிஞர் இ.முருகையனுடன் இணைந்து எழுதப்பட்டது. அது தேனருவி சஞ்சிகையில் தொடராக வெளியிடப்பட்டது.

ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் என்ற இவரது படைப்பு ஜுலை 1965இல் எழுதப்பட்டு சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டது. 1971இல் மகாகவி நூல் வெளியீட்டுக் குழு இதனைத் தனி நூலாகவும் வெளியிட்டது. ஒரு சாதாரண மனிதனது வாழ்வு நிகழ்ச்சிகளை கவிதையில் நெய்த ஒரு காவியம் இது.

சமுதாய வரலாற்று நிகழ்வுகளை சித்திரிக்கும் கோடை என்ற இவரது பா நாடகம் பெப்ரவரி 1966இல் எழுதப்பட்டு ஓகஸ்ட் 1969இல் மேடையேற்றம் கண்டது. தமிழில் தோன்றிய பா நாடகங்களுள் இது முன்னணியில் திகழ்கின்றது எனலாம்.

ஈழத்தில் நிலவும் சாதிப் பிரச்சினையைக் கருப் பொருளாகக் கொண்டு வில்லுப்பாட்டு வடிவத்தில் உருவான அழியாக் காவியம் கண்மணியாள் காதை. இது கலட்டி என்ற பெயரில் நவம்பர் 1966இல் எழுதப்பட்டது. இலங்கை வானொலியில் மே 1967இல் ஒலிபரப்பப்பட்டது. அதே ஆண்டு டிசம்பரில் மேடையேற்றமும் கண்டது. இவரது புதியதொரு வீடு என்ற நாடகம் 1989இல் வெளிவந்திருந்தது.

மகாகவியின் முதல் கவிதைத் தொகுதியான வள்ளி ஜுலை 1955இல் முதல் பதிப்பைக்கண்டது. இன்றைய ஹைக்கூ கவிதைக்கு முன்னோடியான மகாகவியின் குறும்பா முதற்பதிப்பு 1966ல் அரச பதிப்பாக வந்தது. வீடும் வெளியும் கவிதைத் தொகுதி ஜுன் 1973இல் மகாகவியின் மறைவின் பின்னர் எம். ஏ.நு..்.மானால் வெளியிடப்பட்டது. மகாகவியின் ஆக்கங்களை வெளியிடுவதிலும், அறிமுகம் செய்வதிலும், திறனாய்வு செய்வதிலும் இவர் முக்கியமானவர். கல்லழகி, சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை, கந்தப்ப சபதம், தகனம் ஆகிய மாகவியின் ஆறு காவியங்கள் என்ற தலைப்பில் இவரால், தேசிய கலை இலக்கியப் பேரவையின் வாயிலாக மார்ச் 2000இல் வெளியிடப்பட்டது. கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று ஆகிய மூன்று பா நாடகங்கள்; மாகவியின் மூன்று நாடகங்கள் என்ற பெயரில் தேசிய கலை இலக்கியப் பேரவை, சென்னை சவுத் விஷன் நிறுவனம் ஆகியவற்றின் துணையுடன் ஜுன் 2000ல் பதிப்பிக்கப்பட்டது.

அவரது மறைவின் பின்னர் அவரது அனைத்துப் படைப்புகளும் விபரங்களும் தொடர்புகளும் குடும்பச் சொத்தாக குடும்பத்தினரால் பேணிப் பாதுகாக்கப்பட்டது.1992இல் அளவெட்டிப் பகுதியை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்த வேளையில் ஏற்பட்ட இராணுவ அனர்த்தங்களின் பின்னர் மகாகவியின் குடும்பத்தினர் அவ்வில்லத்திலிருந்து இடம்பெயந்த பிற்பாடும் அவை உறவினர்களால் பாதுகாக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத் தக்கது. மகாகவியின் மறைவிற்குப் பிற்பாடும் அவரது எழுத்துக்களுக்கு உயிரழிக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

www.tamilarangam.net



ச முருகையா,
இலண்டன், 23-12-03

# முஸ்லீம்களது அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்

"தேசம்" சஞ்சிகை இதழ் 15ல் காலத்தின் தேவை கருதி அரசியல் ஆய்வுப் பகுதியில் மிக அவசியமான ஒரு கருத்து வலியுறுத்தப்பட்டு உள்ளது. இதன் மூலம், ஈழத்து இனப்பிரச்சினையை யதார்த்தமான, நடைமுறை சாத்தியமான அணுகுமுறைகளால் வென்றெடுக்க வேண்டும் என்றும்; அதனை சமூகப் பொறுப்புள்ளவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்.

தற்போதுள்ள சமாதான ஒப்பந்த காலத்தில் சிங்கள மக்களுடன் உறவுகளை ஏற்படுத்தி, அரசியல்ரீதியாக தமிழருக்கு பிரச்சினைகள் உள்ளன என்பதை சாதாரண சிங்கள மக்கள் அறிந்துகொள்ள வழிசெய்யும் வாய்ப்புக்கள் உள்ளன. இதற்கான அரசியல் செயற்பாடுகளை சிங்கள மக்கள் மத்தியில் முன்வைக்கத் தவறியது விடுதலைப் புலிகள் மாத்திரமல்ல. அவர்களுக்கு ஆதரவு தருகிறோம் என்று கூறிக்கொண்டு கொழும்பில் சிங்கள பேரினவாத அரசியல் தலைவர்களுடன் தமது சுய லாபங்களுக்காகப் பேரம் பேசிக் கொண்டிருக்கும் ஏனைய அரசியல் கட்சிகளும் தான் தவறிவிட்டன.

விடுதலைப் புலிகளைவிட சிங்கள மக்களிடையே அரசியல் ரீதியாக நெருக்கமாகச் செயற்பட அதிக வாய்ப்புள்ளவர்களாக இருந்தும் 1980ம் ஆண்டு திரு அமிர்தலிங்கம் தமிழ் மக்களுக்குச் செய்த அரசியல் துரோகத்தையும் காட்டிக் கொடுப்பையும் தமது அரசியல் தாரக மந்திரமாகக் கொண்டே இன்றும் அவர்கள் கொழும்பில் செயற்படுகிறார்கள்.

முஸ்லீம்கள் தமிழ் பேசுபவர்களாக இருந்தாலும் தனிக்கலாச்சார அலகு கொண்டவர்களாக இருப்பதால் அவர்களது அரசியல் உரிமை பற்றிய எதிர்காலம் அரசால் முன்வைக்கப்படும் முன்னதாக வி.புலிகளால் முன்வைக்கப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. அப்படியிருந்தும் கடந்த இடைக்கால நிர்வாகசபை உறுப்புரைகளில் இவை தெளிவாகக் குறிப்பிடப்படாமல் மேலோட்டமாகத் தொட்டுச்செல்லப்பட்டு உள்ளது.

இது 1950களில் சிங்களத் தலைவர்களின் மீது தமிழருக்கு ஏற்பட்ட சந்தேகம் போல் முஸ்லீம்கள் வி.புலிகள் மீது கொள்ள வழியமைத்து உள்ளது. இலங்கை மக்களின் பூர்வீகம், இதுவரை விஞ்ஞான பூர்வமான முடிபுகளால் அறுதியிட்டு நிரூபிக்கப்படாத நிலையில், இன்று வி.புலிகளால், தமிழர்கள் என உள்ளடக்கப்படும் முஸ்லீம்கள் நாளை தாமும் தாயகப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படலாம்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலான தமிழரின் போராட்டத்தினால் ஈழத்தமிழர் இழந்தவையும், போராளிகளின் உயிர்த் தியாகமும், ஈடுசெய்ய முடியாததுதான். ஆயினும், சர்வதேச அரசியல் ஒழுங்கில் பூகோளரீதியில் எதிர்காலத்தில் தாம் முஸ்லீம்கள் என்ற கோஷத்தை முன்னெடுத்து தமிழர்களுக்கு எதிராக இலங்கைத் தமிழ் முஸ்லீம்கள் ஆயுதப் போராட்டத்தை தொடக்கலாம். அதனால் மீண்டும் வடக்குக் கிழக்குப் பகுதியில் இரத்தக்களரியொன்று ஏற்படும். அப்பொழுது, இன்று சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஆட்சியமைக்கும் தமிழினம் நாளை சிங்கள அரசின் நடுநிலைமைக்குக் கட்டுப்பட்டுப் பிரிந்து சென்று மீண்டும் பலவீனமான ஒரு சமூகமாக மாற இது வழியமைக்கும்.

இலங்கை வரலாற்றில் சிங்கள அரசர்கள் தனித்து நின்று தமிழர்களை வெற்றி கொண்டதாக வரலாறு இல்லை. நெருக்கடிகள் ஏற்படும் போது இந்தியாவின் உதவியுடனேயே இவர்கள் தமிழர்களுடன் பொருதி உள்ளார்கள். இதனால் வி.புலிகள் இந்தியா பற்றிய கொள்கையில் கடைப்பிடிக்கும் கடும் போக்கில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதை 'தேசம்' வெளிப்படுத்தி உள்ளது. கால மாற்றம் தேவைகள் கருதி நன்மை தருவதாக இருந்தால் நமது கொள்கைகளை மாற்றிக் கொள்வதில் தவறில்லை என்றும் சுட்டிக்காட்டி இருப்பது வரவேற்கத்தக்கது. தங்களது கருத்துக்களில் தவறவிடப்பட்ட ஒரு அம்சத்தையும் இங்கு நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மலைநாட்டுத் தமிழர்கள் இந்த அரசியல் தீர்வுக்குள் அடக்கப்படாமல் உள்ளனர். எதிர்காலத்தில் குடியுரிமை வழங்கப்படும் போது அரசியல் ரீதியான அங்கத்துவம் பெற்றுக்கொள்ளும் நிலையில், குடித்தொகை அளவில் மலையகத் தமிழரும் இலங்கைத் தமிழ் முஸ்லிம்களும் தமிழர் பிரதிநிதித்துவத்தைவிட அதிகமான பங்கை இலங்கை அரசியலில் கொண்டிருப்பார்கள். இதன் காரணமாக சிங்கள பேரினவாத அரசால் இவர்கள் உள்வாங்கப்படலாம். மேலும் இந்தியத் தமிழர்கள் அரசியல் ரீதியாக இலங்கைத் தமிழர்களால் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற கோஷத்துடன், இலங்கையில் ஓர் அரசியல் சமூக பொருளாதாரக் குழப்ப நிலையை சிங்கள அரசுகள் தொடரவும் இது வாய்ப்பளிக்கும்.

ஆசிரியர் குறிப்பு – உங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு மிகுந்த நன்றிகள். தொடரவும். கட்டுரையாளர்களின் கருத்துக்கள் தேசத்தின் கருத்துக்களாக எப்போதும் இருப்பதில்லை.

*கதாசிரியர் ந மகேஸ்வரி அரை நூற்றாண்டு கால இலக்கிய அனுபவம் உடையவர். மலேசிய மண்ணின் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். சிறுகதைகள், குறுநாவல்கள், தொடர்கதைகள், கட்டுரைகள், வானொலி நாடகங்கள், கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றை மலேசிய மண்ணில் படைத்துள்ளார். 1963இல் நேசன் எழுத்தாளர் விருது, 1964இல் எழுத்தாளர் சங்கத்தின் தங்கப்பதக்கம் பெற்றவர். 1983இல் சிலாங்கூர் மாநில மணிமன்றம் இவரது 25ஆண்டு கால இலக்கியச் சேவையைப் பாராட்டி கௌரவித்துள்ளது. ஆதிநாகப்பன் இலக்கியவிருதும், பாரதிதாசனின் நினைவுப் பரிசும் பெற்றவர்.*

# வீட்டிலே சும்மாதான்

ந.மகேஸ்வரி

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்னலட்சுமியைப் பார்த்த மகிழ்ச்சி நெஞ்சுக்குள் படர்ந்தது.

''பார்த்து எவ்வளவு நாளாச்சு! நல்லா இருக்கிறியா?''

ஆவலோடு நலம் விசாரித்தாள்.

''நான் நலமாகத்தான் இருக்கிறேன்! அதுசரி, நீ ஏன் இப்படி இருக்கிறே..?

மெலிந்து... சோர்ந்து போய்... உடம்புக்கு ஏதாவது...''

''அதெல்லாம் இல்லே! நல்லாத்தானே எப்போதும் போல இருக்கேன்..! பார்த்து நாளாச்சு! அதான் உனக்கு அப்படித் தெரியுது..''

அவள் மிகவும் சாதாரணமாகத் தான் பேசினாள். ஆனால், எனக்கு என்னவோ சமாதானப்படவில்லை.

''வேலைக்குப் போகிறாயா..?''

''இல்லையே வீட்டிலே தான் இருக்கேன்?''

இப்போது அவளுடைய கணவர் குறுக்கிட்டார்.

''வீட்டிலே சும்மாதான் இருக்குது..! இப்பவே இப்படி இருக்கு.. இன்னும் வேலைக்குப் போனால் சொல்லவே வேணாம்..''

அவள் கணவர் சலிப்போடு கூறுவது போல எனக்குப் பட்டது.

''வீட்டிலே சும்மா தான்..''

என் நெஞ்சுக்குள் சுருக்கென்று குத்தி நெருடியது அவர் பேச்சு.

இரட்டைமாடி வீடு!

பெரிய ஹால்!

பொருட்கள் யாவும் பளிச்சென்று தூய்மையாகவும் எடுப்பாகவும் இருந்தன. பளிங்குத்தரை பளபளத்தது.

''வீட்டு வேலைக்கு துணையா யாரும் இருக்காங்களா? வேலைக்காரி..''

''அதெல்லாம் ஒன்றுமில்லே...''

''வீட்டைப் பிரமாதமா அழகுபடுத்தியிருக்கியே..அதான் கேட்டேன்.''

''வீட்டிலே சும்மாதானே இருக்குது.. வேற வேலை!

எப்போ பார்த்தாலும் அதைத் துடைக்கிறதும் நகர்த்தி வைக்கிறதும்தான்! அதுதானே பொழுதுபோக்கு.. அந்தமாதிரி வேலைன்னா ரொம்ப இஷ்டம்.. நேரங்காலம் பாக்காம செய்துகிட்டே இருக்கும்.''

இத்தனை வேலையும் ஒரு பொழுதுபோக்குத் தானா? துடைப்பது கழுவுவது எல்லாம் வேலையே இல்லையா? அவள் வேலைக்குப்போகாமல் வீட்டிலே சும்மாதான் இருக்கிறாளாம்.

எனக்கு மீண்டும் சுருக்கென்று நெஞ்சைக்கிள்ளியது. அன்னம் உள்ளே போய் தேநீரும் பலகாரமும் கொண்டுவந்தாள்.

''ரொம்ப ருசியாய் இருக்கே..! நல்லா சமைக்கக்கத்துக்கிட்டியா? இல்லே சமையலுக்கு யாராவது இருக்காங்களா?''

''என்ன கிண்டலா..? நானேதான் செய்தேன்..!

தேநீருடன் சாப்பிட ஏதாவது வேண்டுமே.. பலவருட அனுபவத்தில் கைவந்தது தான்..!''

''இத்தனை வேலைகளுக்கிடையில் இதெல்லாம் செய்ய நேரமிருக்கா..? சிரமமா இல்லே..?''

www.tamilarangam.net



"சிரமத்தைப் பார்த்தால் எப்படி..? வீட்டிலே இருக்கிறவங்க ஏதாவது செய்துவைக்காட்டி சும்மா விடுவாங்களா..?"

அவள் பேச்சு வெளிப்படையாக வெகுளித்தனமாக இருந்தாலும், ஆழ்மனதுக்குள்ளே அங்கலாய்ப்பு இருப்பதாகத் தோன்றியது.

"ஆமாம்! அன்றாட அனுபவம் தான். ஒவ்வொருநாளும் பலகாரம், கேக்கு, பிஸ்கட் என்று எதையாவது செய்வதுதான் அன்னத்துக்குப் பொழுதுபோக்கு..! எந்தநேரமும் டீவியிலே ரேடியோவிலே எல்லாம் சமையல் புரோகிராம் இருக்கில்லே! பார்த்ததை உடனே செய்திடணும் அதைவிட்டா வேற வேலை..!"

மீண்டும் அதே சலிப்படைந்த குரல்.

"ஆமா..ஒரு நாளைக்கு பிஸ்கட் ரொட்டி ஏதாச்சும் சாப்பிடுங்கன்னு சொன்னால் முகத்தைச் சுளிப்பீங்க..! வடையில்லையா.. போண்டா இல்லையா..குவே ஏதாச்சும் செய்தா என்ன.." என்று முனகுவீங்க..! பாவம் வாய்க்கு ருசியா ஏதாச்சும் செய்து தரலாமேன்னு கஷ்டப்பட்டு செய்தா நான் என்னமோ பொழுது போகாமல் செய்ற மாதிரி கிண்டல் செய்வீங்க.."

அன்னம் முகம் சுளிக்காமல் தான் இப்படிக்கூறினாள். கணவனுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் செய்கிறோம் என்ற மகிழ்ச்சியும் மனத் திருப்தியும் அதில் பொதிந்து கிடப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

அதேசமயம் அவளுக்கு வேலையும் அதிகம். ஓய்வும் குறைவு! அதனால் தான் உடல் நலிந்து காணப்படுகிறாள் என்பதை அவளுடைய கணவனால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை?

அவளுடைய உடல் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடையாது. இதே வேலையை ஒரு வேலைக்காரி செய்தால் அதற்கான தொகையைக் கட்டாயம் கொடுத்தாக வேண்டும்!

அல்லது அன்னம் வெளியே சென்று தன் உழைப்பின் மூலம் குறிப்பிட்ட தொகையைச் சம்பாதிக்க முடியும்.

ஆனால் அவளுடைய சலியாத உழைப்பையோ அன்பான சேவையையோ யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை! அதன் அருமையை உணர்வதாகவும் இல்லை!

வெளியில் சென்று பணத்திற்காக வேலை செய்வதற்குத் தான் மதிப்பும் மரியாதையும் இருப்பதாகத் தோன்றியது.

எனக்கு ஏனோ அன்னத்தின்மீது அளவுக்குமீறின பரிவும் பச்சாத்தாபமும் பீறிட்டது.

"இவ்வளவு ருசியாக இருக்கிறதே! அதற்காக அன்னத்திற்குப் பாராட்டு பரிசு ஒன்றுமில்லையா..?"

நான் வேண்டுமென்றே சீண்டிவிட்டேன்.

"அதுதான் கலர் டெலிவிஷன், ரேடியொ, வீடியோ எல்லாம் இருக்கே.. அது போதாதா..

நான் வேலைக்குப் போயிடுவேன்! பிள்ளைகளும் பள்ளி, டியுசன், கேம்ஸ் என்று போயிடுவாங்க! அன்னந்தானே வீட்டிலே சும்மா இருக்கும்..! நல்லா ஜாலியா பார்த்துக்கிட்டு இருக்குமில்லே.. அதுவே பெரிய பரிசுதானே?"

அவள் கணவரின் பேச்சு எனக்கு எரிச்சலைத் தூண்டியது. நாள் முழுவதும் அவள் செய்யும் வேலைகள் எதுவும் பெரிதாகப் படவில்லை! சிறிதுநேரம் அரைகுறையாக டெலிவிஷன் பார்ப்பது பூதாகரமாகத் தென்படுகிறது. ஆள் மிகவும் அழுத்தமான கடைந்தெடுத்த சுயநலம் என்பது தெள்ளத்தெளிவாகவே புரிந்தது.

தான் தன் சுகம்! தன் விருப்புவெறுப்பு. இவை மட்டும் தானா? மனைவி வெறும் ஜடம் என்று நினைக்கிறாரோ..?

இதற்கு ஏன் சிவப்பா.. அழகா.. படித்த பெண்ணைத் தேடித்தேடி அலைந்து திருமணம் செய்துகொள்ள விரும்பினார்?

பெண் பொறுப்பாகக் குடும்பத்தைக் கவனிப்பாளா..? வாய்க்கு ருசியாக சமைப்பாளா..? வீட்டு வேலைகளை ஒட்டுமொத்தமாக தானே செய்யக்கூடிய உடல் வலிமை இருக்கிறதா என்றெல்லாம் பார்க்கிறதில்லையே..?

அப்பொழுது மட்டும் சந்தனச் சிலைபோல, பூப்போல, தேவதைபோல பெண் வேண்டும்!

பிறகு..?

நாள் முழுவதும் உழைக்கும் இயந்திரமாக, சம்பளம் இல்லாத வேலைக்காரியாக சே!

பரிசு வேண்டாம்..! பாராட்டு வேண்டாம்..!

ஆறுதலாக அன்பாக ஒரு வார்த்தை! அவள் உழைப்பின் அருமையை மதிக்கத் தெரிந்தவராக இருந்தால் அவள் எவ்வளவு பெருமிதமும் மகிழ்ச்சியும் கொள்வாள்..?

இது ஏன் புரிவதில்லை..?

பேசிக்கொண்டே வெளியே வந்தோம்.

www.tamilarangam.net



வெளியே இருந்த சிறிதளவு இடத்திலே விதவிதமான ரோஜாப் பூக்களும், பல நிறங்களில் போகன் விலா செடிகளும் பூத்துக் குலுங்கின.

"சின்னஞ்சிறிய பாசிகளில் வகைவகையான குரோட்டன்ஸ். இதுக்கெல்லாம் எவ்வளவு கவனிப்பும் அக்கறையும் தேவை? உனக்கு நேரம் இருக்கிறதா.. அல்லது தோட்டக்காரர் யாராவது வேலை செய்கிறார்களா?"

நான் என் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல்தான் அப்படிக் கேட்டு வைத்தேன்.

"ஓரேடியாய் ஐஸ் வைக்காதே.." அவள் சிணுங்கலாய் சிரித்தாள்.

"இல்லே..! நிஜமாகவே இவ்வளவு அழகாக அருமையாக வைத்திருக்கிறாயே என்பதால்தான் கேட்டேன்.."

"எனக்குப் பூச்செடிகள் வளர்ப்பதிலே ஒரு தனி மகிழ்ச்சி, ஆ..று..த..ல்."

நான் சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தேன்.

அவளுக்கு அந்த ஆறுதல் பூச்செடிகளினால் மட்டுமே தானா?

தன் உழைப்பைப் பெற்றுக்கொண்டு அழகாக பூத்துச் சிரிக்கும் மலர்களினால் தான் அவள் மகிழ்ச்சியும் மன அமைதியும் காணுகின்றாள் போலும்.

"என் வீட்டு வாசலிலே இருக்கிற நாலைந்து செடிகளும், நீர் ஊற்றக்கூட முடியாமல் காய்ந்து போகிறது! உனக்கு எப்படி முடிகிறது..?"

"நீங்க வேலைக்குப் போறீங்க.. நேரமிருக்காது! அன்னம் வீட்டிலே சும்மா தானே இருக்கு...அதுக்கும் பொழுது போகணுமே.."

அவள் கணவனின் அலட்சியமான அந்தப் பேச்சும் போக்கும்.. சே..! நான் பல்லைக் கடித்துக்கொண்டேன்.

நான் ஏதாவது சொல்ல அது அவள் குடும்பத்துக்குள் குழப்பத்தையும் சங்கடத்தையும் கொண்டு வந்துவிடப் போகிறதே என்ற அச்சம் என்னை இறுக்கிக் கட்டியது.

அன்னத்தின் முகத்தில் ஒரு சன்னமான சோகரேகை படர்ந்து மறைந்தது.

அன்னம் வெளியே சென்று வேலை செய்து சம்பாதிக்கவில்லைதான்! ஆனால், நாள் முழுவதும் தன் கணவருக்காக, குழந்தைகளுக்காக குடும்ப நலனுக்காக சுயநலமின்றி உழைக்கிறாளே அது வேலையில்லையா?

துரை முனியாண்டி
மலேசியக் கவிஞர்

ஆடைகளைச்
துச்சாதனனாய்
நின்று
நிதானமாய்
துகிலுரிகையில்
நான் தான்
கண்ணீர்ப்பூக்களைச்
சிந்தினேன்.

கண்ணனிடம்
சேலை பெற்ற
திரௌபதையாய்
நின்றது
வெங்காயம்.

அந்த உழைப்புக்கு விலை என்ன?

விலைமதிக்க முடியாத அந்த உடல் உழைப்பு அன்பு சேவை அர்ப்பணிப்பு யாவுமே சிலநூறு வெள்ளி காகித நோட்டுக்களைக் கொண்டு வரும் சம்பளப் பணத்துக்கு முன்னே செல்லாக்காசாக வலுவிழந்து போய்விடுவது ஏனோ..?

ஒரு வேலைக்காரியாக, சமையல்காரியாக, பிள்ளைகளை கவனித்துக் கொள்ளும் ஆயாவாக, கணவனைக் கவனிப்பதில் ஒரு அந்தரங்கச் செயலாளினியாக, தோட்டத்தை அழகுபடுத்தும் தோட்டக்காரியாக இன்னும் வீட்டை நிர்வகிக்கும் நிர்வாகியாக கணவனும் பிள்ளைகளும் வெளியே சென்றுவிடும் பகல்நேரம் முழுதும் விசவாசமுள்ள காவலாளியாக பொறுப்பேற்று நாள்முழுவதும் பாடுபடும் ஒருத்தி அந்த அன்னம்.!

வீட்டில் சும்மாதான் இருக்கிறாளாம்..!

"அன்னம் நீ படித்த பெண்தானே! ஏன் இப்படி நாள் முழுவதும் வெறுமனே சமையல் அறையிலும், வீட்டிலும், தோட்டத்திலும் வெட்டியாக வீணாகப் பொழுது போக்குகிறாய்..? வெளியே சென்று வேலை செய்தால் சம்பளம் கிடைக்குமே.."

நான் நறுக்கென்று இப்படிக்கூறிவிட்டு விடுவிடுவென்று நடந்தேன்.

(நன்றி: மகேஸ்வரியின் சிறுகதைகள்.
கிள்ளான்: மலேசிய தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்,
1வது பதிப்பு, ஆகஸ்ட் 2003.
200 பக்கம். விலை: மலேசிய ரிங்கிட் 200.)

மானசி

# உங்களுக்கே இக்கேள்வி

போர், போர்!!
போர், முதலாம் கட்டம்.
போர், இரண்டாம் கட்டம்.
போர், மூன்றாம் கட்டம்.
அப்புறம்,
போராட்டம் மாறாது: வடிவங்கள் மாறும்:
எப்போதும் அவர்கள்
எம் காதிற் பூச்சுற்றுவார்.

பேச்சு மேசைக்கு வருவார்
எதிரியோடு
தேனிலவு கொண்டாடுவார்:
இடையே
எறிகணைகள், பீரங்கிகள்
துப்பாக்கிகள், வெடிகுண்டுகள்
எல்லாம்
குவித்தக் கொள்வர்!

இதயசுத்தி இல்லாதோர் - ஆதலால்
தம் கண்களைத் தாமே குத்தி
மறுபடியும் யுத்தமாகிடுவர்.
ஏனென்றால்,
யுத்தம் இல்லையேல் - மறு நொடியே
தாமும் இல்லையென்று
அவர் அறிவர்.

பவுண் கொடுங்கள், பணம் கொடுங்கள்
வீட்டிற்கு ஒரு பிள்ளை தாருங்கள்
ஊரெல்லாம் முழக்கமிடுவர்
மக்களெல்லாம் நகருங்கள் வன்னிக்கு
என்றும் சொல்வர்!

சுதந்திரம் பேசுவார் - யாரையும்
சுதந்திரமாய் அனுமதியார்!
உண்மைகள் எதிலும் பற்றற்றார்! - ஆதலால்
உண்மை பேசுவோர் உயிர் எடுப்பார்
சாவதற்கே வழி காட்டுவார் - ஆதலால்
வாழ்வதற்கு முனைவோரை
துரோகியென்பார்!

இன்னும் எத்தனை நாளோ? - எம்மேல்
இவர் சவாரி செய்வார்!
இதன் முடிவுதான் யார் கையில்?
தொடங்கிய இடத்திற்கே
திரும்ப வருதல்
என்ன வகை முன்னேற்றம்?

பவுண் கொடுத்தோரே, பணம் கொடுத்தோரே
விசில் அடித்தோரே, வீர முழக்கமிட்டோரே
பிள்ளையையும் பறிகொடுத்தோரே
உங்களுக்கே இக்கேள்வி!!

Viveq Computers



www.tamilarangam.net

www.tamilarangam.net

# வறுமைக்கோட்டின் உரிமையாளர்

மட்டுவில் ஞானகுமாரன்

இவர்
காலடித் தடங்களில்
மட்டுமே சகாராக்கள்

இவனது
காட்டில் மட்டுமே
என்றும் இலையுதிர் காலம்

இவனது பூமியை மட்டும்தான்
நாள்தோறும் அமாவாசைகள்
ஆக்கிரமித்துக் கொள்கின்றன

இவன்
முகத்திலே விழுந்திருக்கும்
கோடுகளே
இவன் முகவரிகளாகின

உச்சி
வெய்யிலிலே
பூமிக்கு நிழல்தரும்
கிளையற்ற மரம் இவன்

சுரண்டச்
சுரண்ட வரண்டு போனது
இவன் வாழ்வியல்

வாழும்போது
ஓரடி நிலம் மறுக்கப்படும்
நிலையிது
சாகும்போது ஆறடி நிலத்தை
எங்கே எதிர்பார்ப்பது

சூரியன்
உறங்கும் காலத்திலும்
இவன் விழிகள் மட்டும்
நாளைய புலர்விற்காய் விழித்திருக்கும்

**தேசம் சஞ்சிகையின்**

# நிகழ்வுகள்

வரலாற்றுத்துறை பேராசிரியர்
பத்மநாதனுடன் சந்திப்பும்
கலந்துரையாடலும்



வத்தியூர் மைக்கலின்
கவிதைத் தொகுதி
அறிமுகமும் விமர்சனமும்

குறும்படக் காட்சி

தமிழக சிறப்பு முகாம்
சந்திப்பும் போராட்டமும்

சிறுவர் தேசம் - அறிமுகம்



சார்ள்ஸ் சோமசுந்தரத்தின்
**GLIMPSES OF THE EELAM TAMIL HERITAGE**
சிறுவர் நூல் வெளியீடு

பேராசிரியர் பத்மநாதன்,
கலாநிதி தியாகராஜா
வரலாற்றுக் கட்டுரைகள் - தொகுப்பு
வெளியீடும் கலந்துரையாடலும்



என் செல்வராஜாவின்
நூல் தேட்டம் - 2
2வது ஆயிரம் நூல்களின்
தொகுப்பு அறிமுகம்

யாழ் நூலகம்
கவிதைத் தொகுப்பு அறிமுகம்



விமல் குழந்தைவேலின்
அசதி சிறுகதைத் தொகுதி
அறிமுகமும் விமர்சனமும்

சண்முகதாசன்
நினைவுக் கட்டுரைகள்
நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. தமிழகத் திரைச் சங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி கூட்டு முயற்சியுடன் செயற்படும் நோக்கில் தமிழ்த் திரைப்படக் கலைஞர்கள் ஒன்றியம் டிசம்பர் 3ல் உருவாக்கப்பட்டது. கீர்த்தி சினி ஆர்ட்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் ஆனால் சுயாதீனமாக இயங்கும் என கீர்த்திசிங்கம் தெரிவித்தார். இலண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 4வது திரைப்பட அமைப்பு இது.



2. மாற்று திரைப்படத்தின் ஒலிப்பேழை வெளியீடும் கலைஞர்கள் அறிமுகமும் குற்றிங் லோவா ஜோன்ஸ் மண்டபத்தில் ஜனவரி 31ல் நடைபெற உள்ளது. இதன் போது சில குறும் படங்களும் காண்பிக்கப்பட இருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு சண் :
0208 397 4073
0795 841 2515



3. நீண்ட காலத் தயாரிப்புகளின் பின் ஈழவர் திரைக்கலை மன்றத்தின் நான்கு குறும் படங்கள் ஜனவரி 29, 30, 31 மற்றும் பெப்ரவரி 01 ஆகிய தினங்களில் இலண்டனின் வெவ்வேறு பகுதிகளிலும் பின்னர் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் திரையிடப்பட இருக்கின்றது. மேலதிக விபரங்களிற்கு பறிஸ்டர் ஜோசப் : 0208 8029889



4. 2012 ஒலிம்பிக் போட்டியை இலண்டனில் நடத்த அரசும் இலண்டன் மேயரும் முயற்சி எடுத்து வருகின்றனர். ஒலிம்பிக் குழுவை இணங்கச் செய்யும் தயாரிப்பு வேலைகள் வேகமாக இடம்பெறுகிறது. ஒலிம்பிக் நிகழ்வில் சிறுபான்மை சமூகங்கள் பற்றி கவுன்சிலர் போல் ஆலோசனை வழங்கினார். கவுன்சிலர் போல் - இலண்டன் மேயர்.

